# EL.D.C.NO.SM II/P1/9382/2018

**Resolution No.001/2019** **Date:03-01-2019**

## Electrical department – Dearth of labours – Labour staff required through contract for maintaining streetlights – To hire minimum labour force for 6months in Zones 1 to 15 – For Administrative Sanction.

The main objective of Electrical Department of Greater Chennai Corporation is to provide proper street lighting for the use and safety of the public and to maintain the same in continuous and good working condition. The total number of street lights in the city is about 2,77,662 numbers. This includes lights in parks, playgrounds, burial grounds, high masts etc. The department also maintains the electrical lights and electrical installations and appliances in the GCC Buildings such as Division Offices, Amma Canteens, Amma Kudineer, Lorry station, School buildings, Hospitals, Burial Grounds and Public lavatories.

Hiring of man power (Electrician) are essentially required for monitoring fuse box, terminations, underground cable fault, pillar box fault and all other electrical maintenance in buildings, hospitals, schools, parks & play fields etc.

The existing Operation and Maintenance Contracts will expire in December 2018.

The details of manpower requirement are tabulated below:

| sl no | Z | No of Street Lights | No of sections | Electrical Staffs presently available | Man Power Proposed | **TOTAL INCLUDING PROPOSED HIRING** | LAMP POSTS PER PERSON |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | I | 12160 | 4 | 7 | 20 | **27** | 450 |
| 2 | II | 10867 | 3 | 1 | 36 | **37** | 294 |
| 3 | III | 18104 | 4 | 5 | 20 | **25** | 724 |
| 4 | IV | 17842 | 7 | 64 | 20 | **84** | 212 |
| 5 | V | 15129 | 6 | 64 | 25 | **89** | 170 |
| 6 | VI | 18107 | 5 | 70 | 20 | **90** | 201 |
| 7 | VII | 23496 | 5 | 14 | 25 | **39** | 602 |
| 8 | VIII | 20652 | 7 | 80 | 20 | **100** | 207 |
| 9 | IX | 22877 | 8 | 112 | 20 | **132** | 173 |
| 10 | X | 23789 | 7 | 87 | 20 | **107** | 222 |
| 11 | XI | 17932 | 5 | 6 | 20 | **26** | 690 |
| 12 | XII | 14477 | 5 | 6 | 20 | **26** | 557 |
| 13 | XIII | 23474 | 8 | 83 | 20 | **103** | 228 |
| 14 | XIV | 20373 | 5 | 2 | 20 | **22** | 926 |
| 15 | XV | 18137 | 3 | 0 | 21 | **21** | 864 |
| 16 | HO | | 1 | 31 | 10 | **41** | |
| | | 277416 | 83 | 632 | 337 | 969 | 286 |

The zones 1,2,3,7,11,12,14 and 15 were formed with newly added areas. The maintenance of street lights on TANGEDCO concrete poles in these zones (except Zone 15) are through Street light Operation and Maintenance Contracts as earlier followed by the erstwhile local bodies. These zones do not have a permanent electrical labour force. To improve the standards of street lighting, new street lighting infrastructure as per the existing norms in Greater Chennai Corporation with separate street lamp posts and underground cables have been provided in these Zones. The entire Electrical Department in Greater Chennai Corporation can follow a uniform method of street light maintenance.

In the 15 zones, there are 83 sections in Electrical Department. Each section is headed by either an Assistant Engineer or a Junior Engineer or a Lighting Inspector. They are assisted by electrician, wireman and electrical helpers. The sanctioned strength of labour force in Electrical Department in seven Zones namely 4,5,6,8,9,10 and 13, for this is 1108 Nos, out of which the available present strength is 632 nos.

**EL.D.C.NO.SM II/P1/9382/2018**

The Government was requested for orders to fill up the 337 nos of vacancies as on 12-12-2014 in the Electrical Department (in seven Zones namely 4,5,6,8,9,10 and 13), in reply to which, vide the Government letter 31712/மாந3/2014-4 dated.31.08.2016, it is stated manpower may be taken through outsourcing and utilized for the street light maintenance works. Further, as per the GO Ms No 68 MA&WS Department, dated 26-3-1992 two persons can be employed for every 600 nos. of street lights.

After the addition of new areas to Greater Chennai Corporation there has not been any augmentation of the work force. Apart from the regular street light maintenance, the quantum of work is on the increase due to disturbance from other service departments like TANGEDCO, Metro Water, BSNL and due to construction of Storm Water Drains, widening of roads etc. The electrical maintenance should be attended and rectified immediately in view of electrical safety.

Details of the contracts that have been awarded for Hiring of Manpower in the Zones as follows:

| Sl no | Zone | Total lights | No of sections | Details of present contract | | Action taken / to be taken |
|---|---|---|---|---|---|---|
| | | | | Manpower contract | Present stage | |
| 1 | I | 12160 | 4 | Manpower – 10 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |
| 2 | II | 10867 | 3 | Manpower – 10 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |
| 3 | III | 18104 | 4 | Manpower – 20 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |
| 4 | IV | 17842 | 7 | Manpower – 10 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |
| 5 | V | 15129 | 7 | Manpower – 10 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |
| 6 | VI | 18107 | 5 | Manpower – 10 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |
| 7 | VII | 23496 | 5 | Manpower – 10 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |
| 8 | VIII | 20652 | 8 | Manpower – 10 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |
| 9 | IX | 22877 | 8 | Manpower – 10 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |
| 10 | X | 23789 | 7 | Manpower – 10 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |
| 11 | XI | 17932 | 5 | Manpower – 10 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |
| 12 | XII | 14477 | 5 | Manpower – 10 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |
| 13 | XIII | 23474 | 9 | Manpower – 10 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |
| 14 | XIV | 20373 | 5 | Manpower – 10 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |
| 15 | XV | 18137 | 3 | Manpower – 10 persons | contract period to be extended | Action to be taken for manpower – 10 persons for six months |

**EL.D.C.NO.SM II/P1/9382/2018**

It is proposed to call separate tenders for the Zones 1 to 15 as per the above details. In the previous proposal for seeking approval for hiring the manpower, in maintaining the street lights, as suggested by Principal Chief Engineer, Comprehensive proposal for operation and maintenance is being worked out and will be submitted to get Administration Sanction. The tender process for the Comprehensive proposal will take about two months time.

As of now, the labour hiring contract period is nearing completion and in this particular day, there is Minimum staff available to take care of street light maintenance.

It is suggested that, at least 10 persons per zone, need to be necessarily engaged to take of non burning issues.

The conversion of street light into energy savings LED lights will be over by January 2019, and till then the stop gap arrangements need to be made available.

The approximate cost of hiring 10 labours per month, for 6 months comes to Rs. 10,56,145.75 for each Zone. Separate tenders will be called for each zone.

| S.No | Zone | No.of Persons | Cost for 6 months | Administration sanction on |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | I | 10 | 10,56,145.75 | 10,56,150 |
| 2 | II | 10 | 10,56,145.75 | 10,56,150 |
| 3 | III | 10 | 10,56,145.75 | 10,56,150 |
| 4 | IV | 10 | 10,56,145.75 | 10,56,150 |
| 5 | V | 10 | 10,56,145.75 | 10,56,150 |
| 6 | VI | 10 | 10,56,145.75 | 10,56,150 |
| 7 | VII | 10 | 10,56,145.75 | 10,56,150 |
| 8 | VIII | 10 | 10,56,145.75 | 10,56,150 |
| 9 | IX | 10 | 10,56,145.75 | 10,56,150 |
| 10 | X | 10 | 10,56,145.75 | 10,56,150 |
| 11 | XI | 10 | 10,56,145.75 | 10,56,150 |
| 12 | XII | 10 | 10,56,145.75 | 10,56,150 |
| 13 | XIII | 10 | 10,56,145.75 | 10,56,150 |
| 14 | XIV | 10 | 10,56,145.75 | 10,56,150 |
| 15 | XV | 10 | 10,56,145.75 | 10,56,150 |

Hence,

1. To accord administration sanction for hiring man power for each zone as above as mentioned in the Column -5
2. To meet the expenditure under the Repairs and Maintenance Budget Head of Electrical Department for the year 2018 – 2019.

Sl.No.1 & 2 above, orders of the Special Officer-Standing Committee(Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's note dated.31.12.2018 is read.

**"Sl.No.1 & 2 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

*****

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/2673 /2018**

**தீர்மான எண்.002/2019** **நாள்: 04-01-2019**

**இயந்திரப்பொறியியல் துறை - பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட சாலையோரங்களில் நீண்ட நாட்களாக பழுதடைந்து போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள கேட்பாரற்ற வாகனங்கள் காவல் துறை உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மின்னனு ஏலம் விடப்பட்டது - ஏலத் தொகையான ரூ.2,21,45,006/-ல் MSTC நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய சேவைக் கட்டணம் 3% (GST 18 % உடன்) போக மீதத் தொகையான ரூ.2,13,61,072/-ல் சென்னை மாநகர காவல் துறையின் கோரிக்கைக்கிணங்க மீதத் தொகையில் 75% (ரூ. 1,60,20,804) வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட சாலையோரங்களில் நீண்ட நாட்களாக பழுதடைந்து போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள, கேட்பாரற்ற இரண்டு / மூன்று / நான்கு சக்கர வாகனங்கள் காவல் துறை உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு, மத்திய மற்றும் தெற்கு வட்டார பணிமனையின் கீழ் பெறப்பட்ட மொத்தம் 7875 எண்ணிக்கை வாகனங்களை விற்பனை செய்யும் பொருட்டு திருவாளர்கள். MSTC Ltd, சேவை நிறுவனத்தின் மூலம் மூன்று தொகுப்புகளாக மின்னனு ஏலம் நடத்தி அதிக விலை கோரிய நிறுவனங்களுக்கு வாகனங்களை வழங்க ஆணையர் / சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெறப்பட்டு, மொத்த பொருள் தொகை ரூ.2,21,45,006/-, மற்றும் GST வரி 18% மற்றும் வருமான வரி 1% அனைத்தும் பெறப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் கணக்கு குறியீடு எண்.150100700, கணக்கு தலைப்பு - Sale of Products - Scrap, M.E. Dept / General Work Shop (404107) செலுத்தப்பட்டது, பின்பு, வாகனங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

பொருள் தொகை, GST வரி 18% மற்றும் வருமான வரி 1% அனைத்தும் பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்ட விவரம் பின்வருமாறு.

| வ. எண் | வட்டாரம் | மொத்த வாகனங்கள் | கோரிய பொருள் விலை (ரூ) | GST 18% for (1) (ரூ) | வருமான வரி 1 % for (1+2) (ரூ) | மொத்தம் செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு | 2627 | 68,80,002 | 12,38,400 | 81,184 | 81,99,586 |
| 2 | மத்தியம் | 2924 | 91,05,002 | 16,38,900 | 1,07,439 | 1,08,51,341 |
| 3 | தெற்கு | 2324 | 61,60,002 | 11,08,800 | 72,688 | 73,41,490 |
| | மொத்தம் | 7875 | 2,21,45,006 | 39,86,100 | 2,61,311 | 2,63,92,417 |

மேற்கண்ட வாகனங்களை மின்னனு ஏலம் விற்பனை செய்த மொத்த தொகை ரூ.2,21,45,006/-ல் திருவாளர்கள் MSTC Ltd., சேவை நிறுவனம் மூலம் மின்னனு ஏலம் நடத்தி விற்பனை செய்ததற்கான 3% சேவைக் கட்டணம் (GST 18% உட்பட) ரூ.7,83,934/. போக மீதமுள்ள தொகை ரூ.2,13,61,072/- பெருநகர சென்னை மாநகராட்சி நிதி கணக்கில் உள்ளது.

காவல் ஆணையர், சென்னை மாநகர காவல் துறை அவர்களின் 14.11.2018. நாளிட்ட கடிதத்தில், மாநகர சாலைகளில் கேட்பாரற்று நிறுத்தி வைக்கப்பட்ட வாகனங்களால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்ட நிலையிலும், காவல் நிலையத்தில் பறிமுதல் செய்து நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களால் பொது மக்களுக்கு இடையூறாக இருந்த காரணத்தினாலும், மேலும் இவ்வாகனங்களால் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்ட நிலையில் இவ்வாகனங்கள் அனைத்தும் ஏலம் விடும் பணிக்கென பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது.

தற்பொழுது சென்னை மாநகர காவல் துறை ,சென்னை மாநகர முழுவதும் குற்றவியல்களை தவிர்க்கும் பொருட்டும், பொது மக்கள் நலன் மற்றும் பெண்களின் பாதுகாப்பு கருதியும் கண்காணிப்பு கேமாரக்கள் பொருத்தும் பணி மேற்கொண்டு வருவதாகவும் இப்பணியினை மேலும் சிறப்புற மேற்கொள்ள தேவைப்படும் நிதியினை கேட்பாரற்ற வாகனங்களை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட தொகையிலிருந்து பங்களிப்பு அளித்து உதவுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/2673 /2018**

இது குறித்து ஆணையர் அவர்களுக்கு, பெருநகர காவல் துறை மேற்கொண்ட பணிகளையும், பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொண்ட பணிகளையும் விபரத்துடன் சமர்ப்பித்து, காவல் துறைக்கு வழங்க வேண்டிய பங்களிப்பு தொகையினை வழங்கவதற்கு பரிந்துரை செய்ய வேண்டி குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பில் ஆணையர் அவர்களின்04.01.2019 நாளிட்ட ஆணையில் கீழ்கண்டவாறு பரிந்துரை வழங்கியுள்ளார்கள்.

பெருநகர காவல் துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி இணைந்து மேற்கொண்ட பணிகளில் பெரும்பலான கேட்பாரற்ற வாகனங்கள் காவல் துறை மூலம் பறிமுதல் செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் பெறப்பட்டு தீர்வு செய்யப்பட்டது. இதில் மின்னணு ஏலம் நடத்தி தீர்வு செய்த பணிகளை மட்டுமே பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது பெருநகர சென்னை காவல் ஆணையர் அவர்கள் உயர்ந்த நோக்கத்தோடு சென்னை மாநகர முழுவதும் பொது மக்கள் பாதுகாப்பினை மேம்படுத்த கேமரா பொருத்தும் பணிக்கு பங்களிப்பு நிதி வழங்கி உதவ கேட்டுகொண்டுள்ளார்கள். பொதுவாக, எந்த ஒரு பணிக்கும் சேவைக்கட்டணமாக 10 சதவீதம் அல்லது அதிகபட்சமாக 15 சதவீதம் வசூலிக்ககலாம். பெருநகர சென்னை மாநகராட்சி கேட்பாரற்ற வாகனங்களை தீர்வு செய்ய அதிகமுயற்சி எடுத்துள்ளதால் ஈட்டிய வருவாயில் 25 சதவீதம் மாநகராட்சி தக்கவைத்து கொள்ளவும் மற்றும் மீதமுள்ள 75 சதவீதம் தொகையினை மாநகர காவல் துறைக்கு வழங்க ஆணையர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மேலும் இதன் பொருட்டு மன்றத்தீர்மானம் பெற ஆணையர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

இதன்படி கேட்பாரற்ற வாகனங்கள் தீர்வு செய்ததன் மூலம் பெறப்பட்ட மொத்த தொகையான **ரூ.2,13,61,072/-**ல் (திருவாளர்கள். MSTC Ltd.,க்கு வழங்கப்பட்ட சேவைக்கட்டணம் நீங்கலாக) சென்னை மாநகர காவல் துறைக்கு பரிந்துரைக்கப்பட்ட 75% பங்களிப்பு தொகையானது **ரூ.1,60,20,804/-** ஆகும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு இடங்களிலிருந்து போக்குவரத்திற்கு இடையூறாகவும், கேட்பாரற்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் காவல்துறை மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியால் பெறப்பட்டு, மின்னணு ஏலம் நடத்தி தீர்வு செய்யப்பட்டு, மாநகராட்சி நிதியில் கணக்கு வைக்கப்பட்டுள்ள **ரூ.2,13,61,072/-**ல் சென்னை மாநகர காவல் ஆணையர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, மேற்கண்ட பெறப்பட்ட தொகையில் மாநகர காவல் துறைக்கு **75%** தொகை **ரூ.1,60,20,804/-** வழங்கவும்,
2. மேற்கண்ட தொகையினை காவல் ஆணையர், வேப்பேரி, சென்னை-600 007 என்ற பெயரில் காசோலையாக வழங்கிட நிதி ஆலோசகர் அவர்களை அறிவுறுத்தவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.01.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

## இ.பொ.து.பொ.தொ.ந.க.எண்.w5/025/2018

**தீர்மான எண்.003/2019** **நாள்: 07-01-2019**

**இயந்திரப்பொறியியல் துறை - பொது தொழிற் சாலையில் உள்ள கழிவு செய்யப்பட்ட வெவ்வேறு அளவுகள் கொண்ட 1,140 பேட்டரிகள் கொண்ட ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய M/s MSTC Ltd, சேவை நிறுவனம் மூலம் 28.11.2018 அன்று மின்னணு ஏலம் நடைபெற்றதில் உயர்ந்த விலை (ரூ.20,26,001/-) கோரிய திருவாளர்கள். Valarmathi Alloys., நிறுவனத்திற்கு மேற்கண்ட கழிவு பொருட்களை வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப்பொறியியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள பொதுதொழிற்சாலையில் பல்வேறு லாரி நிலையங்களிலிருந்து பெறப்பட்ட, கழிவு செய்யப்பட்ட வெவ்வேறு அளவுகள் கொண்ட 1,140 பேட்டரிகள் கொண்ட ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யும் பொருட்டு, மதிப்பாய்வு செய்வதற்கு மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக்குழு 17.09.2018 அன்று நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. அவை அனைத்தும் பயனற்றவை என கழிவு செய்யப்பட்ட நிலையில், கீழ்கண்டவாறு விலை நிர்ணயம் செய்யப்பட்டு ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி மின்னணு ஏலம் மூலம் விற்பனை செய்து தீர்வு செய்யலாம் என இக்குழுவின் அங்கத்தினர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பேட்டரி அளவு | எண்கள் | பேட்டரி அளவு வரியாக தொழில்நுட்ப குழு நிர்ணயித்த விலை | தொழில்நுட்ப குழு மொத்த மதிப்பீடு (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | 12 V/13PI | 746 | 1400 | 1044400 |
| 2. | 12 V/11PI | 21 | 1400 | 29400 |
| 3. | 12 V/19PI | 173 | 1800 | 311400 |
| 4. | 12 V/25PI | 1 | 1800 | 1800 |
| 5. | 65 A H | 67 | 1200 | 80400 |
| 6. | 80 A H | 103 | 1400 | 144200 |
| 7. | 35 A H | 28 | 700 | 19600 |
| 8. | 14 LAZ | 1 | 350 | 350 |
| மொத்தம் | | 1140 | | 16,31,550/- (தோராயமாக 16,32,000/-) |

அதன்படி 28.09.2018 அன்று மின்னணு ஏலம் நடத்த திருவாளர்கள். MSTC Ltd., சேவை நிறுவனத்திற்கு 20.09.2018 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. 28.09.2018 அன்று நடைபெற்ற மின்னணு ஏலத்தில் அதிக விலையாக ரூ.12,10,000/- மட்டுமே கோரப்பட்டது. ஆனால் அந்த விலையானது தொழில்நுட்ப குழு அளித்த விலையான (ரூ.16,32,000/-) விட குறைவாக இருந்ததால் அந்த மின்னணு ஏலம் நிராகரிக்கப்பட்டது.

மீண்டும் 28.11.2018 அன்று மறு மின்னணு ஏலம் நடத்த திருவாளர்கள். MSTC Ltd., சேவை நிறுவனத்திற்கு 16.11.2018 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி 28.11.2018 அன்று நடைபெற்ற மின்னணு ஏலத்தில் கோரிய உயர்ந்த விலையான ரூ.20,26,001/- தொழில்நுட்ப குழு நிர்ணயித்த விலை (ரூ.16,32,000/-) விட (+) 24.14% உயர்வாக உள்ளதால் மின்னணு ஏலம் ஏற்கப்பட்டது.

மேலும், மின்னணு ஏலத்தில் அதிகபட்ச விலையாகிய ரூ. 20,26,001/-ஐ கோரிய திருவாளர்கள். Valarmathi Alloys., நிறுவனத்திற்கு கழிவு செய்யப்பட்ட வெவ்வேறு அளவுகள் கொண்ட 1,140 பேட்டரிகள் கொண்ட ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி வழங்கலாம் என 05.12.2018 நாளிட்ட உயர்மட்ட ஒப்ப ஏற்பு குழு பரிந்துரை செய்துள்ளது.

<u>உயர்ந்த விலை கோரிய நிறுவனத்தின் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.</u>

| வ. எண் | விவரம் | தொழில்நுட்ப குழு மதிப்பீடு செய்த தொகை | அதிகப்பட்ச விலை (Reserve price) | மின்னணு ஏலத்தில் கோரிய உயர்ந்த விலை | உயர்ந்த விலை கோரியுள்ள ஏலத்தாரர் |
|---|---|---|---|---|---|
| 1 | கழிவு செய்யப்பட்ட வெவ்வேறு அளவுகள் கொண்ட 1,140 பேட்டரிகள் கொண்ட ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய | ரூ. 16,31,550/- | ரூ.16,32,000/- | ரூ.20,26,001/- | M/s. Valarmathi Alloys |

**இ.பொ.து.பொ.தொ.ந.க.எண்.W5/025/2018**

எனவே, 28.11.2018 அன்று நடைப்பெற்ற மின்னணு ஏலத்தில் அதிக விலை கோரியுள்ள திருவாளர்கள். Valarmathi Alloys., நிறுவனம் அளித்த விலைப்புள்ளி ரூ.20,26,001/-யில் 25% பாதுகாப்பு தொகையாக ரூ.5,06,500/- ஐ DD No.007069 dated. 05.12.2018 drawn on IDBI Bank) திருவாளர்கள். Valarmathi Alloys.,யிடமிருந்து திருவாளர்கள். MSTC Ltd., நிறுவனம் பெற்றுக் கொண்டதாகவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் உறுதிப்படுத்தல் கிடைத்தவுடன் கொடுப்பனவு, விற்பனை ஆணையுடன் (Payment along with Sale order Copy) அனுப்பி வைக்கப்படும் எனவும் திருவாளர்கள். MSTC Ltd., நிறுவனம் தங்கள் 10.12.2018 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளனர்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி பொது தொழிற்சாலையில் உள்ள கழிவு செய்யப்பட்ட வெவ்வேறு அளவுகள் கொண்ட 1,140 பேட்டரிகள் கொண்ட ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய திருவாளர்கள். MSTC Ltd., சேவை நிறுவனம் மூலம்மின்னணுஏலம்28.11.2018 அன்றுநடைபெற்றதில் திருவாளர்கள். Valarmathi Alloys., அவர்கள் கோரிய உயர்ந்த விலையான ரூ.20,26,001/- தொழில்நுட்ப குழு நிர்ணயித்த விலையை (ரூ.16,32,000/-) ஒப்பிடும்போது (+)24.14% கூடுதலாக இருப்பதால் திருவாளர்கள். Valarmathi Alloys., நிறுவனத்திற்கு மேற்கண்ட கழிவு பொருட்களை விற்பனை செய்யவும்,
2. மேற்கண்ட உள்ள கழிவு செய்யப்பட்ட வெவ்வேறு அளவுகள் கொண்ட 1,140 பேட்டரிகள் உள்ளது உள்ளபடி விற்பனை செய்யும் பொருட்டு மின்னணு ஏலத்தில் அதிக விலை ரூ.20,26,001/- கோரிய திருவாளர்கள். Valarmathi Alloys., நிறுவனத்தார் மொத்த ஏல தொகையில் தற்போது திருவாளர்கள். MSTC Ltd., நிறுவனத்தில் அளித்துள்ள 25% பாதுகாப்பு தொகையான ரூ.5,06,500/- போக மீதமுள்ள 75% தொகையான ரூ.15,19,501/- உடன் GST 18% ரூ.3,64,680/, வருமானவரி1%, ரூ.23,907/ அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமலிள்ள வரி தொகைக்கு ஏற்ப M/s Valamathi Alloys-யிடம் இருந்து பெற்று மொத்த தொகையான ரூ.24,14,588/-ஐ திருவாளர்கள். MSTC Ltd., நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு, தனித்தனியாக செலுத்துச்சீட்டின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் வரைவு காசோலையாக செலுத்தி, அனுமதி பெற்ற பின்னர் மேற்கண்ட கழிவு பொருட்களை ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி நிலையில் திருவாளர்கள். Valarmathi Alloys., கொண்டு செல்லவும்,,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.01.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**சுது நகஎண். *NUHM /B2/ 6952 /2019***

**தீர்மான எண்.*004/2019*** **நாள்: *07-01-2019***

**பொதுசுகாதாரத்துறை- தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் *19* இருபத்தி நான்கு மணி நேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகளுக்கு தேவையான *38* காவலர்களை ஓராண்டு காலத்திற்கு *(12.02.2018* முதல் *11.02.2019* வரையில்) ஒப்பந்த அடிப்படையில் *M/s. Monisha Security Service* நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டது - ஒப்பந்த அடிப்படையில் பதினோரு மாத காலத்திற்கு மின்னனு ஒப்பம் கோரி பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை, தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.43/2018 நாள்.25.01.2018ன்படி 19 இருபத்தி நான்கு மணி நேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகளுக்கு தேவையான 38 காவலர்களை ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு (12.02.2018 முதல் 11.02.2019 வரையில்) ஒப்பந்த அடிப்படையில் M/s. Monisha Security Service நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளது.

| SNo | Zone | Name of the EOC's and Address | No of Securities Required |
|---|---|---|---|
| 1 | 1 | Thiruvottiyur EOC | 2 |
| 2 | 2 | Manali EOC | 2 |
| 3 | 3 | Madhavaram EOC | 2 |
| 4 | 4 | Dr.R.K.Nagar EOC | 2 |
| 5 | 5 | Sanjeevarayanpet EOC | 2 |
| 6 | 5 | Perumalpet EOC | 2 |
| 7 | 6 | Pulianthope EOC | 2 |
| 8 | 7 | Padi UCHC | 2 |
| 9 | 8 | Ayanavaram EOC | 2 |
| 10 | 8 | Shenoy Nagar EOC | 2 |
| 11 | 9 | Mirshahibpet EOC | 2 |
| 12 | 10 | Vadapalani EOC | 2 |
| 13 | 10 | Saidapet EOC | 2 |
| 14 | 11 | Porur EOC | 2 |
| 15 | 12 | Alandur EOC | 2 |
| 16 | 12 | Mugalivakkam EOC | 2 |
| 17 | 13 | Adyar EOC | 2 |
| 18 | 14 | Thoraipakkam EOC | 2 |
| 19 | 15 | Chemmencherry UCHC | 2 |
| | | Total | 38 |

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் காவலர்களுக்கு அடிப்படை ஊதியத்துடன், பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), பணியாளர் இன்சூரன்ஸ் (Employee's State Insurance), சரக்கு மற்றும் சேவை வரி (GST), மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம் (Administrative Charges) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது.

| Employee's State Insurance | | Employee's Provident Fund | | GST |
|---|---|---|---|---|
| **Employer Contribution in the salary** | Employee Contribution in the salary | **Employer Contribution in the salary** | Employee Contribution in the salary | |
| **4.75%** | 1.75% | **13%** | 12.00% | **18%** |

**சுது நகஎண். *NUHM /B2/ 6952 /2019***

திட்ட இயக்குநர், நகர்ப்புற சுகாதாரத்திட்டம் தமிழ்நாடு அவர்களின் 24/07/2018 நாளிட்ட கடித்தில் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் ஊதியத்தில் 50%அடிப்படை ஊதியமாகவும், மீதமுள்ள 50% இதர படிகளாகவும் நிர்ணயம் செய்து அடிப்படை ஊதியத்திற்கான பணியாளர் வருங்கால வைப்புநிதி (Employee's Provident Fund) வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Category of Staff | Basic Pay (Rs) | Allowances | EPF (13%) (Rs) | ESI (4.75 %) (Rs) for Gross Salary | Service Charge as per NUHM Norms (Rs) | GST (18%) (1+2+3+4) (Rs) | Total (1+2+3+4+5) (Rs) | Required Number of Staff | Total 11 months (Rs) (6x7x11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | |
| Security | 4700 | 4700 | 611 | 447 | 500 | 1972 | 12930 | 38 | 5404740 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை 19 இருபத்தி நான்கு மணி நேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகளுக்கு தேவையான 38 காவலர்களை ஒப்பந்த அடிப்படையில் பதினோரு மாத காலத்திற்கு பணியமர்த்த அனுமதிக்கும்,
2. இப்பணிகளுக்கென செலவினம் ரூ. 54,04,740/ (ரூபாய் ஐம்பத்தி நான்கு லட்சத்து நான்காயிரத்து எழுநூற்றி நாற்பது மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,
3. இதற்கென பொதுசுகாரத்துறை தலைமையிடத்தில் மின்னணு ஒப்பம் கோர அனுமதிக்கும்,,
4. இச்செலவினம் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டம் 2018- 2019ல் FMR Code U.8.1.10.1 கீழ் மேற்கொள்ள அனுமதிக்கும்,

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்*)*, நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி*)* மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *05.01.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்*)*, நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி*)* மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**பொ.சு.து.நக.எண்.பி1/3603/2018**

**தீர்மான எண்.005/2019** **நாள்: 07-01-2019**

**பொதுசுகாதாரத்துறை- மாநில சுகாதார அமைப்பு மூலம் 5 நகர சமுதாய சுகாதார மையத்திற்கு (UCHC) 9 டயாலிசிஸ் இயந்திரங்கள் பெருநகர மருத்துவ அலுவலர் / கூடுதல் இயக்குநர் அவர்கள் மூலம் பெறப்பட்டு மண்டலங்களுக்கு பிரித்தளிக்கப்பட்டுள்ளது - தேசிய நகர்புற சுகாதார திட்டதின் நிதியிலிருந்து 3 மண்டலங்களில் (வடக்கு, மத்திமம் மற்றும் தெற்கு) ஒரு மண்டலத்திற்கு 4 வீதம் 12 டயாலிசிஸ் இயந்திரங்கள் (Dialysis Unit) அமைக்கப்படவுள்ளது - மேற்படி மொத்தம் 21 இயந்திரங்களை திருவெற்றியூர் மண்டலம் UCHC-ற்கு 11 எண்ணிக்கை மற்றும் பெருங்குடி மண்டலம் UCHC-ற்கு 10 எண்ணிக்கையில் அமைத்திடவும் - தற்போது M/s.Rotary Club of Chennai Coastal அவர்கள் மூலம் வழங்கப்படவுள்ள 10 டயாலிசிஸ் இயந்திரங்களை பெற்று சின்ன போரூர் UCHC மண்டலம்-11ல் அமைத்திடவும் - தமிழக அரசின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்த அனுமதி.**

மாநகரில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை முறை மாற்றத்தின் காரணமாக தொற்றாநோய்கள் அவர்களின் வாழ்க்கையில் முக்கிய சவாலாக அமைந்து, சிறுநீரக சம்மந்தமான நோய்கள் மற்றும் சிறுநீரக செயலிழிப்பு போன்றவைகளுக்கு காரணமாக அமைகிறது. தமிழகத்தை பொறுத்தவரை 10-ல் ஒருவருக்கு சர்க்கரை வியாதியும் மற்றும் மொத்த மக்கள் தொகையில் 8% விழுக்காடு வரை சர்க்கரை நோய் வரக்கூடிய வாய்ப்பும் உள்ளது. இவ்வாறு கட்டுப்படுத்த முடியாத சர்க்கரை நோயால் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு செயலிழக்க வாய்ப்புள்ளது.

இந்நிலையில், உரிய சிகிச்சை அளிக்காமல் இருந்தால் சிறுநீரக நோயால் சிறுநீரகம் செயலிழக்க வாய்ப்புள்ளதுடன் டயாலிசிஸ் மற்றும் சிறுநீரகம் மாற்று அறுவை சிகிச்சையும் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலை உருவாகும் வாய்ப்புள்ளது. மேலும், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகளில் தேவையான அளவு டயாலிசிஸ் யூனிட்கள் இருந்தாலும், சிறுநீரக சிகிச்சைக்கு நகர்புற பகுதியில் வசிக்கும் குறைவான வருமானம் உள்ள மக்கள் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லும் நிலையில் வாரத்திற்கு இருமுறை டயாலிசிஸ் செய்வதினால் கையில் உள்ள பணத்துடன் கூடுதல் செலவினம் ஏற்படுகிறது. எனவே, நகர்புற பகுதியில் உள்ள நகர சமுதாய சுகாதார மையங்களில் டயாலிசிஸ் இயந்திரங்களை அமைக்க தேசிய நகர்புற வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து செயல்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாநில சுகாதார அமைப்பு, நிர்வாக இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் கொருக்குப்பேட்டை நகர சமுதாய சுகாதார மையத்திற்கு (UCHC) 2 டயாலிசிஸ் இயந்திரங்களும், பாடி நகர சமுதாய சுகாதார மையத்திற்கு (UCHC) 2 டயாலிசிஸ் இயந்திரங்களும், சைதாப்பேட்டை நகர சமுதாய சுகாதார மையத்திற்கு (UCHC) 2 டயாலிசிஸ் இயந்திரங்களும், ஆலந்தூர் நகர சமுதாய சுகாதார மையத்திற்கு (UCHC) 2 டயாலிசிஸ் இயந்திரங்களும், அடையாறு நகர சமுதாய சுகாதார மையத்திற்கு (UCHC) ஒரு டயாலிசிஸ் இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி இடங்களில் இயந்திரத்தை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் 20.03.2017 மற்றும் 16.11.2017 நாளிட்ட கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில சுகாதார அமைப்பு NUHM நிதியிலிருந்து தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மூலம் 2016-17 ஆம் ஆண்டிற்கு 5 நகர சமுதாய சுகாதார மையத்திற்கு (UCHC's) பெருநகர மருத்துவ அலுவலர் / கூடுதல் இயக்குநர் அவர்கள் மூலம் பெறப்பட்டு, 9 டயாலிசிஸ் இயந்திரங்களை மண்டலங்களுக்கு பிரித்தளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரங்கள் பின்வருமாறு:

**GCC – NUHM DIALYSIS UNIT STATUS LIST**

| S.No. | Zone | Name of the UCHC where units are placed | Qty | Remarks |
|---|---|---|---|---|
| 1 | 4 | Korukupet UCHC | 2 | Machines received but not yet installed |
| 2 | 7 | Padi UCHC | 2 | |
| 3 | 10 | Saidapet EOC | 2 | |
| 4 | 12 | Alandhur UCHC | 2 | |
| 5 | 13 | Adyar UCHC | 1 | |
| | | **Total** | **9** | |

**பொ.சு.து.நக.எண்.பி1/3603/2018**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண்.34, 2018-19 ஆம் ஆண்டு அறிவிப்பு எண்.5-ன்படி, நகரங்களில் நீரிழிவு நோய் பெருகி வரும் நிலையில் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியில், திருவெற்றியூர், சின்ன போரூர், பெருங்குடி ஆகிய இடங்களில் உள்ள நகர்புற சமுதாய நல மையங்களில் தேசிய நகர்ப்புற சுகாதார திட்ட நிதியின் கீழ் ரூ.2.52 கோடி மதிப்பீட்டில் ஒரு மையத்திற்கு 4 வீதம் 12 நீரிழிவு சிகிச்சை அலகுகள் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு மண்டலத்திற்கு 4 டயாலிஸிஸ் இயந்திரங்கள் வீதம் 12 டயாலிஸிஸ் இயந்திரங்கள் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மூலம் திருவெற்றியூர் மண்டலம் UCHC, சின்ன போரூர் மண்டலம் UCHC, பெருங்குடி மண்டலம் UCHC, ஆகிய 3 மண்டலங்களுக்கு வழங்கப்பட உள்ளதாக இயக்குநர், மாநில சுகாதார அமைப்பு அவர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதன் தொடர்ச்சியாக தேசிய நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2018-19 ஆம் ஆண்டிற்கு ரூ.2.52 கோடி மதிப்பீட்டில் நகர சமுதாய சுகாதார மையங்களுக்கு ஒதுக்கப்பட்டு 3 மண்டலங்களில் ஒவ்வொரு மண்டலங்களுக்கும் 4 டயாலிஸிஸ் இயந்திரம் வீதம் 12 டயாலிஸிஸ் இயந்திரங்கள் அமைப்பதற்காக மாநில சுகாதார அமைப்பு மூலம் ஒப்புதலும், நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒரு டயாலிஸிஸ் இயந்திரம் ரூ.6.05 இலட்சம் வீதம் 12 டயாலிஸிஸ் இயந்திரங்களுக்கு ரூ.72.60 இலட்சம் ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்திற்கு வழங்கப்படவுள்ளது.

இது தவிர, திருவெற்றியூர் மண்டலம் UCHC, சின்ன போரூர் மண்டலம் UCHC, பெருங்குடி மண்டலம் UCHC, ஆகியவற்றில் ஒதுக்கப்பட்டுள்ள டயாலிஸிஸ் யூனிட்டிற்கு கட்டுமான பணிகள் மேற்கொள்ள ஒரு மண்டலத்திற்கு ரூ.50 இலட்சம் வீதம் 3 மண்டலங்களுக்கு ரூ.1.50 இலட்சங்களும், மீதமுள்ள ரூ.29,40,000/-ம் இதர செலவினங்களும் மேற்கொள்வதற்காக ரூ.1,79,40,000/-ம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு துணை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 20.06.2018 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக வழங்கப்பட்டு 05.07.2018 அன்று Chennai City Urban Health Mission கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு

| | **Total – ROP Approved 2018-19** | | **2,52,00,000** |
|---|---|---|---|
| 1. | Purchase of 12 units of dialysis unit for 3 zones (South, North Central) | 605000*12 units (4 Dialysis machine * 3 zones) | 72,60,000 |
| 2. | Construction works for 3 dialysis centres (South, North Central) and other expenses | Approved for civil work @ Rs.50 lakhs / UCHC for 4 dialysis units / centre in 3 UCHC for 3 zones and operational expenses | 1,79,40,000 |
| | | | **2,52,00,000** |

பெருநகர சென்னை மாநகராட்சியின் செயல்பாட்டிற்கு ஏற்கனவே 9 டயாலிஸிஸ் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 12 டயாலிஸிஸ் இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளதையும் சேர்த்து, மொத்தம் 21 டயாலிஸிஸ் இயந்திரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு மண்டலத்திற்கு 7 டயாலிஸிஸ் இயந்திரங்கள் வீதம் அமைப்பதால் 6 டயாலிஸிஸ் இயந்திரங்களை கொண்டு நோயாளிகளுக்கு டயாலிஸிஸ் சிகிச்சை மேற்கொள்ளவும், ஒரு டயாலிஸிஸ் இயந்திரத்தை மாற்றாக வைத்தும் சிகிச்சை அளிக்கலாம். ஏதேனும் ஒரு இயந்திரம் பழுதடையும் நிலை ஏற்படுமாயின் அதற்கு மாற்றாக வைக்கப்பட்டுள்ள (Stand by) டயாலிஸிஸ் இயந்திரத்தை பயன்படுத்தலாம். இதனால் டயாலிஸிஸ் தொடர் சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளிகளுக்கு உடல் நலத்தை சீராக வைத்துக்கொள்ள பேருதவியாக இருக்கும். இதனை கருத்தில் கொண்டு, நிர்வாக நலன் கருதியும், பொது மக்களின் மருத்துவ நலனை கருத்திற்கொண்டும், ஒரு மண்டலத்திற்கு 7 டயாலிஸிஸ் இயந்திரம் வீதம் கீழ்கண்ட 3 மண்டலங்களில் அமைக்கலாம்.

**பொ.சு.து.நக.எண்.பி1/3603/2018**

| வ. எண். | டயாலிஸிஸ் சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட உள்ள இடங்கள் |
|---|---|
| 1. | திருவெற்றியூர் மண்டலம் UCHC, மண்டலம் – 1 |
| 2. | சின்ன போரூர் மண்டலம் UCHC, மண்டலம் – 11 |
| 3. | பெருங்குடி மண்டலம் UCHC, மண்டலம் – 14 |

மேற்காணும் 3 நகர சமுதாய சுகாதார மையங்களிலும் புதிய கட்டுமான பணிகள் ஏற்கனவே நடைபெற்று வரும் நிலையில், டயாலிஸிஸ் இயந்திரங்களை அமைப்பதற்கான பணிகளையும் சேர்த்து நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாநில சுகாதார அமைப்பு மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் ரூ.1,50,00,000/-ஐ கட்டுமான பணிகள் மேற்கொண்டு வரும் பெருநகர சென்னை மாநகராட்சி, கட்டிடத் துறைக்கு வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, வள்ளுவர் கோட்டம் பகுப்பாய்வு கூடத்தில் நோயாளிகளுக்கு நல்ல முறையில் டயாலிஸிஸ் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வரும் M/s. Tanker Foundation அவர்கள் மூலம், மேற்படி அட்டவணையில் தெரிவித்துள்ள இடங்களில் டயாலிஸிஸ் சிகிச்சையினை தொடரலாம் எனவும், இப்பணியினை தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டு திட்டத்தின் மூலம் செயல்படுத்தலாம் எனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. மாநில சுகாதார அமைப்பு மூலம் 2016-17 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மூலம் (TNMSC) பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 5 நகர சமுதாய சுகாதார மையங்களில் (UCHC's) *9* டயாலிஸிஸ் இயந்திரங்கள் பெறப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை *2018-19* ஆம் ஆண்டு மானிய கோரிக்கை எண்.*34*, அறிவிப்பு எண்.*5*-ன்படி, தேசிய நகர்புற சுகாதார வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2018-19 ஆம் ஆண்டிற்கு ரூ.2.52 இலட்சங்கள் நகர சமுதாய சுகாதார மையங்களுக்கு மாநில சுகாதார அமைப்பு மூலம் ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் *3* மண்டலங்களுக்கு (திருவெற்றியூர் மண்டலம் UCHC, சின்ன போரூர் மண்டலம் UCHC, பெருங்குடி மண்டலம் UCHC), ஒரு மண்டலத்திற்கு *4* டயாலிஸிஸ் இயந்திரம் வீதம் *12* டயாலிஸிஸ் இயந்திரங்களை பெற்று அமைக்க அனுமதியும்,
3. மேற்கண்ட *1* மற்றும் *2*ல் படிக்கப்பட்டுள்ள *9* மற்றும் *12* ஆக மொத்தம் *21* இயந்திரங்களை பெருநகர சென்னை மாநகராட்சியின் செயல்பாட்டிற்கு ஒரு மண்டலத்திற்கு *7* வீதம் *3* மண்டலங்களில் (திருவெற்றியூர் மண்டலம் UCHC, சின்ன போரூர் மண்டலம் UCHC பெருங்குடி மண்டலம் UCHC) அமைக்க அனுமதியும்,
4. மேற்படி மண்டலங்களில் உள்ள நகர சமுதாய சுகாதார மையங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள டயாலிஸிஸ் யூனிட்டிற்கு கட்டுமான பணிகள் மேற்கொள்ள ஒரு மண்டலத்திற்கு ரூ.50 இலட்சம் வீதம் *3* மண்டலங்களுக்கு மாநில சுகாதார அமைப்பு மூலம் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.1,50,00,000/-ஐ கட்டிட துறைக்கு வழங்கிட அனுமதியும்,
5. வள்ளுவர் கோட்டம் பகுப்பாய்வு கூடத்தில் M/s.Tanker Foundation அவர்கள் மூலம் நோயாளிகளுக்கு நல்ல நிலையில் டயாலிஸிஸ் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேற்படி *3* மண்டலங்களில் செயல்படுத்தவுள்ள டயாலிஸிஸ் சிகிச்சையினை சம்மந்தப்பட்ட மண்டல அளவிலேயே M/s. Tanker Foundation அவர்கள் மூலம் மேற்கொள்ளவும்,
6. மாநில சுகாதார அமைப்பு மூலம் *2018-19* ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.29,40,000/-ஐ *3* வட்டாரங்களுக்கு தனித்தனியாக ரூ.9,80,000/- வீதம் பிரித்து அளிக்கவும்,
7. மேற்படி, *3* மண்டலங்களில் உள்ள நகர சமுதாய சுகாதார மையங்களில் அமைக்கப்படவுள்ள டயாலிஸிஸ் மையங்கள் செயல்படுத்த தேவையான அனைத்து செலவினங்கள் மற்றும் தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத் திட்ட அட்டைகள் இல்லாத நோயாளிகளுக்கு ஆகும் செலவினங்களை இனம்-6ல் உள்ளபடி, தனித்தனியாக மண்டல அளவில் மேற்கொள்ளவும்,

8. M/s.Tanker Foundation மூலம் 3 மண்டலங்களில் (திருவெற்றியூர் மண்டலம் UCHC, சின்ன போரூர் மண்டலம் UCHC, பெருங்குடி மண்டலம் UCHC) சிறுநீரக சிகிச்சையினை மேற்கொள்ள, தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்த அனுமதியும்,
9. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு M/s.Tanker Foundation மூலம் வழங்கப்படும் சிறுநீரக சிகிச்சை மேற்கொண்ட நோயாளிகளின் பெயர் பட்டிகளில் தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தில் பயன் பெறும் நோயாளிகள் எவரும் இடம் பெறாமல் இருப்பதற்கும்,
10. தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தில் பயன் பெறும் நோயாளிகள் பெருநகர சென்னை மாநகராட்சியில் தீர்வு செய்யப்படும் பட்டிகளில் இடம் பெற்றிருந்தால், M/s.Tanker Foundation அவர்களுக்கு வழங்கப்படும் பணியாணையினை எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்ய அனுமதியும்,
11. தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தின்படி, M/s.Tanker Foundation சிறுநீரக சிகிச்சை மேற்கொள்வதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியுடன் **3** வருட காலத்திற்கு ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளவும்,
12. M/s.Tanker Foundation அவர்கள் மூலம் சிறுநீரக சிகிச்சை மேற்கொண்டதற்கான அனைத்து விவரங்களையும், தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட பின்னர், ஒரு நபருக்கு ஒரு முறை டயாலிஸிஸ் செய்ய வழங்கப்படும் தொகையினை தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் 75 சதவீதம் M/s.Tanker Foundation அவர்களுக்கும், இடவசதி மற்றும் பராமரிப்புக்காக 25 சதவீதம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கிட அனுமதியும்,
13. மேற்படி தொகையினை பிரித்து அளிப்பதற்கு சம்மந்தப்பட்ட மண்டலங்களின் மூலம் தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்திற்கு கடிதம் அனுப்பவும்,
14. தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் பயன் பெற இயலாமல், M/s.Tanker Foundation அவர்கள் மூலம் சிறுநீரக சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளிகளுக்கு ஏற்படும் செலவினங்களை, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இடவசதி பராமரிப்புக்காக வழங்கப்படும் 25 சதவீதம் தொகையினை சம்மந்தப்பட்ட மண்டலங்களின் மூலம் பயன்படுத்த அனுமதியும்,
15. தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்படும் 25% தொகையினை சம்மந்தப்பட்ட நகர சமுதாய சுகாதார மையங்களின்(UCHC) பெயரில் தனித்தனியாக புதிதாக வங்கி கணக்கு துவங்கி வரவு வைக்கவும் மற்றும் பராமரிக்கவும், இந்த வங்கி கணக்கில் மேற்கண்ட வ.எண்.6-ல் உள்ளபடி தொகையினை செலுத்தவும்,
16. மேற்படி தொகையினை தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் பயன்பெற இயலாத நோயாளிகளுக்கு சம்மந்தப்பட்ட உதவி சுகாதார அலுவலர்கள், மாநகர நல அலுவலர் அவர்கள் மூலம், துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் ஆணை பெற்று (இனம் 6 மற்றும் 14ல் உள்ளபடி) மண்டல அளவிலேயே செலவழிக்கவும்,
17. M/s.Tanker Foundation அவர்கள் மூலம் மேற்படி காப்பீடுத்திட்டத்திற்கான அனைத்து விதமான செலவினத் தொகையினை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி உடன் ஒப்பந்த உடன்படிக்கை செய்து கொண்ட பின்னரே M/s.Tanker Foundation அவர்களுக்கு "ஆட்சேபனை இன்மை சான்றிதழ்" மேற்படி மண்டலங்களின் மூலம் வழங்கிட அனுமதியும்,

மேற்படி 1 முதல் 17 வரையிலான இனங்களுக்கு ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் ஆணை பெறப்பட்டு, மன்றத் தீர்மானமும் (மன்றத் தீர்மான எண்.589/2018, நாள்.26.07.2018) பெறப்பட்டுள்ளது.

தற்போது M/s.Rotary Club of Chennai Coastal அவர்கள், 10 எண்ணிக்கையிலான டயாலிஸிஸ் இயந்திரங்களை பொது மக்களுக்கு பயன்படும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நடப்பாண்டிற்கு வழங்க உள்ளதற்கு அனுமதி வேண்டி துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களுக்கு 13.12.2018 நாளிட்ட கடிதம் சமர்ப்பித்துள்ளார்கள்.

**பொ.சு.து.நக.எண்.பி1/3603/2018**

இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு M/s. Rotary Club of Chennai Coastal மூலம் வழங்கப்படவுள்ள 10 டயாலிஸிஸ் இயந்திரங்களை சின்ன போரூர் UCHC, மண்டலம்-11-ல் உள்ள டயாலிஸிஸ் சிகிச்சை மையத்தில் அமைத்திடுமாறு துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 25.07.2018 நாளிட்ட ஆணையில் வரிசை எண்.2 மற்றும் 3-ற்கு பதிலாக கீழ்கண்டுள்ளவாறு சில மாற்றங்கள் செய்ய,

அ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 2018-19 ஆம் ஆண்டு மானிய கோரிக்கை எண்.34, அறிவிப்பு எண்.5-ன்படி, தேசிய நகர்புற சுகாதார வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2018-19 ஆம் ஆண்டிற்கு ரூ.2.52 இலட்சங்கள் நகர சமுதாய சுகாதார மையங்களுக்கு மாநில சுகாதார அமைப்பு மூலம் ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் 3 மண்டலங்களுக்கு (திருவொற்றியூர் மண்டலம் UCHC, சின்ன போரூர் மண்டலம் UCHC, பெருங்குடி மண்டலம் UCHC) ஒதுக்கப்பட்டுள்ள 12 டயாலிஸிஸ் இயந்திரங்கள் மற்றும் மாநில சுகாதார அமைப்பு மூலம் 2016-17 ஆம் ஆண்டிற்கு 9 டயாலிஸிஸ் இயந்திரங்கள் பெறப்பட்டுள்ளதையும் சேர்த்து, மொத்தம் 21 இயந்திரங்களை, திருவெற்றியூர் மண்டலம் UCHC-ற்கு 11 எண்ணிக்கையிலும் மற்றும் பெருங்குடி மண்டலம் UCHC-ற்கு 10 எண்ணிக்கையிலும் அமைத்திட அனுமதியும்,

ஆ) தற்போது M/s. Rotary Club of Chennai Coastal அவர்கள் மூலம் வழங்கப்படவுள்ள- 10 டயாலிஸிஸ் இயந்திரங்களை பெற்று சின்ன போரூர் UCHC மண்டலம்-11ல் அமைத்திடவும், ஏற்கனவே வள்ளுவர் கோட்டம் பகுப்பாய்வு கூடத்தில் M/s.Tanker Foundation அவர்கள் மூலம் மேற்கொண்டு வரும் அனைத்து பணிகளும் திருவெற்றியூர் UCHC, பெருங்குடி மண்டலம் UCHC, மற்றும் சின்ன போரூர் UCHC–ல் செயல்படுத்த அனுமதியும்,

மேற்கண்ட "அ" மற்றும் "ஆ" ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.01.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அ" மற்றும் "ஆ" ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**க.து.ந.க.எண். அ2/6871/2018**

**தீர்மான எண்.006/2019** **நாள்: 07-01-2019**

**கல்வித்துறை - சென்னை மாநகராட்சி - 2018 - 2019 ஆம் கல்வியாண்டில் அக்டோபர் மாதம் முதல் சம்பள பில்லில் சில மாற்றங்கள் (Computerization of Finance and Treasury Operation) செய்யப்பட வேண்டி உள்ளதால் சென்னை பள்ளிகளுக்கு தேவையான 164 - Intel i3 Systems, 82 Laser Printer, 164 - OS, 164 - UPS, 82 Scanner மற்றும் 164 McAfee -Antivirus ஆகியவற்றை திருவாளர். எல்காட் நிறுவனத்தில் ரூ. 1,03,11,057/- தொகையில் கொள்முதல் செய்வதற்குஅனுமதி.**

பள்ளி அளவிலான அரசு சார் அனைத்து தொடர்புகளுக்கும் பள்ளியின் விவரப் பதிவிற்கும் கணினியும், அச்சு இயந்திரமும் ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கும் தவிர்க்க முடியாத தேவைகளாக உள்ளன. அதன் _ y« பள்ளியின் அலுவலகப்பணிகள் மேன்மையும், செம்மையும் அடையும் என்ற அடிப்படையில் பள்ளிகளின் அலுவலக பணிகளை நவீன முறையில் மேற்கொள்ளவும், 06.02.2017 நாளிட்ட சார்சம்பள கணக்கு அலுவலர் (APAO)-ன் கடிதத்தில் 2018 - 2019 ஆம் கல்வியாண்டில் அக்டோபர் மாதம் முதல் சம்பள பட்டியலில் சில மாற்றங்கள் (Computerization of Finance and Treasury Operation) செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளதால் அனைத்து பள்ளிகளில் உள்ள கணினிகள் கீழ்கண்டுள்ள Specification-ன் படி, இருத்தல் வேண்டும் என சார் சம்பள கணக்கு அலுவலர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

1. 2.0 GHz Processor
2. 4GB DDR3 Ram,
3. Sufficient Storage (300 + GB Hard Disk)
4. USB 2.0 Ports,
5. Pre-Loaded Microsoft OS
6. windows 2008/2009/2010

அதனடிப்படையில் சென்னை பள்ளிகளில் ஏற்கனவே கணினிகள் பயன்பாட்டில் உள்ள நிலையில் மேற்காணும் Specification -ல் அக் கணினிகள் செயல்பாட்டில் உள்ளனவா என ஆய்வு செய்யவும், அவ்வாறு இல்லாத பட்சத்தில் மாற்றியமைக்கவும் (Window 7 உள்ள கணினிகளில் Window 8/9/10, Upgrade செய்வதற்கும், Storage 300 GB க்கு மேலே உள்ள Hard Disc, வேகம் அதிகரிக்க 2GB Ram உள்ள கணினிகளில் 4GB Ram பொறுத்துவதற்கும் Net Connectivity Speed-ன் அளவு தெரிந்து கொள்வதற்கும் அதை அதிகரிக்கவும், துணை ஆணையர் (கல்வி) அவர்களின் 22.06.2018 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு முதுநிலை முறை மேலாளர் அவர்களுக்கு அனுப்பட்டது.

03.12.2018 நாளிட்ட முதுநிலை முறை மேலாளர் அவர்களின் குறிப்பில் Computerization of Finance and Treasury Operation செயல்படுத்த செய்யப்பட வேண்டி உள்ளதால் 164 – Intel i3 Systems, 82 Laser Printer, 164 – OS, 164 – UPS, 82 Scanner மற்றும் 164 McAfee –Antivirus திருவாளர். எல்காட் நிறுவனத்தில் கொள்முதல் செய்வதற்கு %.1,03,11,057/- தொகையினை விலைப்பட்டியாக வழங்கப்பட்டுள்ளதாகவும், அத்தொகையினை முன்பணமாக திருவாளர் . எல்காட் நிறுவனத்தின் பெயருக்கு வழங்கும் படியும், குறிப்பிடப்பட்டுள்ளது.

| SL No | Description | Unit Price | Qty | Amount |
|---|---|---|---|---|
| 1 | 33040-OT-33040-040- Preloaded Windows OS Latest Edition with Media in Lieu of Preloaded Boss with Media. | 9,400 | 164 Nos | 15,41,600.00 |
| 2 | 33040-OT- 33040 DT 203-3w-Desktop Computer – Intel i3 with Preloaded Linux OS<br>Intel core i3 -7100 Processor (3.9GHz, 3MB L3 Cache) 4GB DDR3. SDRAM @1600 MHz upgradeable up to 32 GB. 2PCI/PCI Express Slots. Integrated graphics controller, 10/100/1000Mbps Network card with remote booting facility, 6USB Ports with at least two with 3.0, VGA/Display port, HDMI RJ45, Internal speaker, Audio 3.5mm jack to support external stereo speakers 2 watts. 19inch TFT/Wide LED Colour monitor Resolution 1366 X 768, 500 GB SATA HDD, DVD Writer, Membrane & Linux, preloaded OS-BOSS Linux with Tamil Office S/W along with DVD media kit. | 25,550 | 164 Nos | 41,90,200.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 33040-OT – 33040-003 – Antivirus – McAfee /Norton Entrust / Kasper sky/ Quickheel/K7with 3 Years License. | 1,790 | 164 Nos | 2,93,560.00 |
| 4 | 32821-OT-G-LIA600-30-G-600VA LIA UPS with 30 minutes SMF ( Panasonic / Exide / Base or any reputed ) battery back up. | 6,750 | 164 Nos | 11,07,000.00 |
| 5 | 32717-OT-G 32717 LJ – 031B-G-Laser Printer A4 25PPM with Duplex Unit and Network – laser Technology Speed - 25ppm Resolution - 600X600 dpi, Papers Supply – 150Sheets or above Media Sizes –Letter ,Legal, Executive, Post cards, Envelopes, media types-paper(plain, Recycled, Envelopes, Transparencies, labels, and cark Stock) Duplex, Net Work, Interface – USB, RJ-45, Operating Systems-Windows and Linux ( Driver Software Mandatory) Compatibility. | 8,631 | 82 Nos | 7,07,742.00 |
| 6 | 32754-OT-G-32754 004 A4 FB-G- A4 Flatbed Scanner Type Flatbed, Scanning Speed at 200 dpi Black and White 20 PPM, Scanning Speed at 200 dpi Color 12 PPM Repopulation Optical ( Maximum) 600 dpi, Scan Area Flatbed A4, File format output, TIFE, JPEG, PDF etc, Interface USB, Imaging Features Auto Image Strengthening ( Deskew), Operating System Compatibility Windows and BOSS Linux ( Driver Software Mandatory ) | 4,805 | 82 Nos | 3,94,010.00 |
மண்டலம்-6, கோட்டம்-66ல் திருமதி. எஸ். ஷகிரா ஷாஜாகான், அவர்கள் பழைய கதவு எண்.158, புதிய கதவு எண்.412, பேப்பர் மில்ஸ் ரோடு, பெரவள்ளூர், சென்னை-600082, T.S.No.55, பிளாக் எண்.10, பெரவள்ளூர் கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-06ல் *PPA/WDCN06/08176/2018*, நாள்.24.11.2018ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக பேப்பர் மில்ஸ் ரோடு, அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி பேப்பர் மில்ஸ் ரோடு 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய தேவையான 15.64 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திருமதி. எஸ். ஷகிரா ஷாஜாகான், அவர்கள் பழைய கதவு எண்.158, புதிய கதவு எண்.412, பேப்பர் மில்ஸ் ரோடு, பெரவள்ளூர், சென்னை - 600082 T.S.No.55. பிளாக் எண்.10, பெரவள்ளூர் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய தேவையான 15.64ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.28,000/-ஐ (ரூபாய் இருபத்தி எட்டாயிரம் மட்டும்) மனை உரிமையாளர் திருமதி. எஸ். ஷகிரா ஷாஜாகான் அவர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.01.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**EL.D.C.No.S.M.II/P1/15067/2018**

**Resolution No.033/2019** **Date:29-01-2019**

**Electrical Department – Dearth of labours – Operation and Maintenance contract for maintaining streetlights – To call tenders for two year Operation and Maintenance contract in Zones 1, 2, 3, 4, 6, 7, 11, 12, 14 & 15 – For Administrative Sanction.**

One of the main objective of any local body, particularly the Metropolitan City like Chennai is to provide better infrastructure facilities to have better motorable roads to the extent possible, to provide proper lighting facility through out the city during night time, apart from keeping the city clean from garbage and silt.

As such, the Electrical Department is one of the nodal department wherein their duties are well-defined to see that the city is illuminated to the expected level during night time for the safety of the Chennai citizens. To have this proper lighting facility, as of now, nearly 2.7 lakhs of street light fittings are erected and maintained by this department.

In the initial stage, all the works pertaining to the maintenance of street lights, maintaining the cables, procurement of materials, keep enough stock were fully taken care by Greater Chennai Corporation's own staff and that time passes, to keep up the expectations of the growing demand and considering huge expenditure by directly recruiting the technical persons, outsourcing seems to be the better option.

It has been clearly mentioned in the Government letter No.31712/MC3/2014-4 dated 31.08.2016, Greater Chennai Corporation can outsource the skilled labours, if there is any shortage in labourers.

Accordingly, Greater Chennai Corporation has started gradually entrusting the works through outsourcing. Of late, it is felt that these outsourcing mechanism has to be streamlined and instead of hiring labour, hiring electrical ladder vehicles and procurement of materials, it is better to have the comprehensive system wherein the contractor will engage labours as per norms prescribed by Greater Chennai Corporation to have enough staff or materials replacement to attend faults and repairs by them as and when warranted by engaging their own electrical ladder vehicles and the consolidated payments could be made, which is the right solution and will avoid handling of multiple system of payments, multiple monitoring mechanism.

Greater Chennai Corporation is already in the process of replacing 100% existing Sodium Vapour Lamps and Metal Halide Lamps by Energy Saving LED street light fittings and this work will be expected to be completed by January 2019.The street light fittings are covered under 7 years replacement warranty.

As time passes, electrical labours are expected to be retiring soon and some of them are unable to do the direct electrical works and sensitive work due to age factor, complexity of the works. Hence, a comprehensive mechanism to maintain the street lights is the need of the hour.

As of now, the existing man power of 623 persons will be diverted to 5 zones i.e. 5, 8, 9, 10 and 13 and minimum manpower will be given to maintain corporation buildings at the outsourcing zones.

The remaining 10 Zones will be taken up under comprehensive maintenance scheme for street lights. The agency who will be selected under due procedures of Tender Transparency Act, for

1. Man power
2. Supply of material such as cables, SMC fuse boxes, Earth coil, Timers, Pillar Box, Main Switch, HDPE Pipe, DWC Pipe etc.,
3. Hydraulic Vehicles
4. to take up parks, highmast lights, playgrounds etc., except Corporation buildings.

**EL.D.C.No.S.M.II/P1/15067/2018**

**The analysis and comparative statement of expenditure towards executing the work is given below:**

The total number of street lamp post to be brought under operation and maintenance in Zones are 1,2,3,4,6,7,11,12,14 & 15

a) Up to 7 mtr : 155129 nos.
b) Above 7 mtr : 15197 nos.
c) High Mast : 270 nos.

I. **If the above mentioned posts are maintained by GCC, the cost to be borne by GCC per annum are as follows:**

1. Salary for 568 persons (minimum man power required to maintain the above lampposts (155129+15197)/300) @ Rs.25,000/- = Rs. 17.04 Cr.
2. Hydraulic/Ladder Vehicle = Rs. 3.83 Cr.
3. Maintenance Materials such as Cables, Fuse Box, Compound etc., = Rs. 2.72 Cr.
4. High Mast Maintenance = Rs. 1.05 Cr.

**TOTAL COST PER ANNUM = Rs. 24.64 Cr.**

II. **If maintained by outsourcing agency tentative cost would be as follows:**

The details of zone wise cost are tabulated below.

| Sl. No | Zone | No. of Section | Number of street light post upto 7m | Amount for lamp posts Upto 7 mtr. Height @ Rs. 1135/- per post | Number of street light post above 7 mtr | Amount for lamp posts above 7 mtr. @ Rs.1735/- per post | High Mast Light | Amount for high mast @ Rs.21400/- per mast | Total Amount |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | I | 4 | 10667 | 12107045 | 1075 | 1865125 | 23 | 492200 | 14464370 |
| 2 | II | 3 | 7991 | 9069785 | 1573 | 2729155 | 8 | 171200 | 11970140 |
| 3 | III | 4 | 14467 | 16420045 | 2053 | 3561955 | 39 | 834600 | 20816600 |
| 4 | IV | 7 | 14108 | 16012580 | 2056 | 3567160 | 24 | 513600 | 20093340 |
| 5 | VI | 5 | 13501 | 15323635 | 3394 | 5888590 | 32 | 684800 | 21897025 |
| 6 | VII | 5 | 22984 | 26086840 | 1711 | 2968585 | 49 | 1048600 | 30104025 |
| 7 | XI | 5 | 18655 | 21173425 | 374 | 648890 | 17 | 363800 | 22186115 |
| 8 | XII | 5 | 13959 | 15843465 | 1445 | 2507075 | 37 | 791800 | 19142340 |
| 9 | XIV | 5 | 20986 | 23819110 | 922 | 1599670 | 23 | 492200 | 25910980 |
| 10 | XV | 3 | 17811 | 20215485 | 594 | 1030590 | 18 | 385200 | 21631275 |
| TOTAL | | | 155129 | 176071415 | 15197 | 26366795 | 270 | 5778000 | 208216210 |

**TOTAL COST PER ANNUM = Rs. 20.82 Cr.**

**Average cost under operation and maintenance per annum**

Per street lamp post up to 7 mtr height = Rs. 1,135/-
Per Street lamp post above 7 mtr height = Rs. 1,735/-
Per High Mast = Rs.21,400/-

As per the proposed contract, the contractor will take up the Operation and Maintenance of all the street lights, High Mast lights and park lights. The contractor will switch ON/OFF the street lights, attend all maintenance of the street light installations (except the LED street light fittings which are covered under 7 years replacement warranty) including lamp post, brackets, fuse box, under ground cable, wires, earthing, pillar box. The contractor will have to maintain 100% burning by employing their own labour and use their own ladder vehicles (hydraulic/manual operated) and other vehicles. Penalty will be imposed for non burning of street lights, absence of manpower and absence of stipulated vehicles and other conditions.

The approximate cost of Operation and Maintenance Contract for **Two** years for the Zones I, II, III, IV, VI, VII, XI, XII, XIV and XV is tabulated below for each Zone. Separate tenders will be called for each zone.

**EL.D.C.No.S.M.II/P1/15067/2018**

| Sl.No. (1) | Zones (2) | Amount for the operation and maintenance contract for street lights including manpower, materials, Hydraulic Vehicle for a period of **two** years in Rs. (3) |
|---|---|---|
| 1 | I | 2,89,28,740 |
| 2 | II | 2,39,40,280 |
| 3 | III | 4,16,33,200 |
| 4 | IV | 4,01,86,680 |
| 5 | VI | 4,37,94,050 |
| 6 | VII | 6,02,08,050 |
| 7 | XI | 4,43,72,230 |
| 8 | XII | 3,82,84,680 |
| 9 | XIV | 5,18,21,960 |
| 10 | XV | 4,32,62,550 |

The expenditure will be met under the Revenue budget head of Electrical Department.

The tenders need to be floated, incorporating the tender conditions with the manpower criteria, financial capability, experience etc., and based on this, tenders will be scrutinized and settled.

Hence,

1. To place the above subject in the council for getting administrative sanction for the operation and maintenance contract for street lights including manpower, materials, Hydraulic Vehicle for a period of **two** years in
   (i)ZoneI-Rs.2,89,28,740 (ii)ZoneII-Rs.2,39,40,280
   (iii)ZoneIII-Rs.4,16,33,200 (iv)ZoneIV-Rs.4,01,86,680
   (v)ZoneVI-Rs.4,37,94,050 (vi)ZoneVII-Rs.6,02,08,050
   (vii)ZoneXI-Rs.4,43,72,230 (viii)ZoneXII-Rs.3,82,84,680
   (ix)Zone XIV-Rs.5,18,21,960 (x)Zone XV-Rs.4,32,62,550
2. To meet out the expenditure from the Revenue budget head of Electrical Department.
3. To have the provision to extend the tender for the period of two more years with the incremental increase of 10% each year in the approved rate.

In the above subject note, Commissioner in his remarks dated.28.01.2019 mentioned as follows;

"**Since, this is a new effort, we may do this for one year. Depending upon the outcome and savings as suggested in Page-3, we may continue for further years.**"

Orders of the Special Officer-Standing Committee(Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested.Commissioner's note dated.28.01.2019 is read.

**"Sl.No. 1 to 3 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

*****

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/2696/2017**

**தீர்மான எண்.034/2019** **நாள்: 29-01-2019**

**நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம் 1 – திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் வட்டம் மற்றும் கிராமம், பிளாக் எண். 1, புல எண். 38/2ல் உள்ள 1411.15 ச. மீ நிலத்தில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்காக நிலம் கோரப்பட்டது - சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு அனுமதி.**

மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர், மண்டலம்-1 அவர்களின் 18.12.2017 நாளிட்ட கடிதத்தில், திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் கிராமம், வார்டு-1, பிளாக் எண். 1, புல எண். 38/2ல் உள்ள 1411.15 ச. மீ பரப்பளவுள்ள நிலத்தில் 49.47ச. மீ நிலத்தினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட வருவாய் அலுவலர்/சட்ட அலுவலர், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அவர்கள் 14.12.2017 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார் எனவும்,

அதனைத்தொடர்ந்து மேற்படி கோரியுள்ள நிலத்தினை 14.12.2017 அன்று மண்டல அலுவலர்-1 அவர்கள் ஆய்வு மேற்கொண்டதில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கோரியுள்ள நிலம் அன்சா அப்பார்ட்மெண்டின் திறந்தவெளி நிலமாக ஒதுக்கப்பட்டு (OSR Land) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டு, 2013-ஆம் ஆண்டு ரூ.49.35 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா உருவாக்கப்பட்டு இதுநாள் வரை ரூ.13,17,410/- செலவில் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், மேற்படி இடத்தில் பூங்கா நுழைவாயில் மற்றும் மதில் சுவர் அமைந்துள்ள காரணத்தினால், நிலத்தின் மதிப்பு மற்றும் புதிதாக பூங்காவின் நுழைவாயில், மதில் சுவர் அமைத்து தரும் பட்சத்தில், மேற்கண்ட இடத்தை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒப்படைப்பதில், ஆட்சேபணை ஏதுமில்லையென அறிக்கை அளித்துள்ளார். (இத்துடன் தானபத்திர நகல் இணைக்கப்பட்டுள்ளது).

துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களின் 16.02.2018 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-1, வார்டு-1, திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் கிராமம், பிளாக் எண். 1, புல எண். 38/2ல் உள்ள 1411.15 ச. மீ பரப்பளவுள்ள நிலத்தில் 49.47ச. மீ நிலத்திற்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் சந்தை விலை மதிப்பின் அடிப்படையில் நிலக்கிரயத்தொகை வசூலிக்கப்படும் என்ற நிபந்தனையுடன் தற்போது தற்காலிகமாக வழிகாட்டு விலை மதிப்பின் அடிப்படையில் தோராயமாக கணக்கிடப்பட்டுள்ள (49.47x36070 ச.மீ = 1784382.9) ரூ. 17,84,383/-ஐ (ரூபாய் பதினேழு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து முன்னூற்று எண்பத்தி மூன்று மட்டும்) செலுத்துமாறும் மற்றும் புதிதாக அமைக்கப்படவுள்ள பூங்காவின் நுழைவாயில், மதில் சுவர் அமைத்து தர இசைவு தெரிவிக்கும்பட்சத்தில், மேற்படி இடத்தினை சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு வழங்க மேல்நடவடிக்கை எடுக்கப்படுமென மாவட்ட வருவாய் அலுவலர்/சட்ட அலுவலர், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர்/சட்ட அலுவலர், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அவர்களின் 05.04.2018 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதாகவும், மேற்படி நிலத்தினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களின் 23.05.2018 நாளிட்ட கடிதத்தில், அரசாணை (நிலை) எண். 167, Planning, Development and Special Initiatives (S.I) Department, நாள்: 17.09.2010-ன் விவரம் பின்வருமாறு:

*The lands to be alienated to Chennai Metro Rail Limited for implementing Chennai Metro Rail Project shall be classifed into following two categories:-*

*(1)(a) Government land or land allocated free by the Government to agencies for specific schemes*

<u>நி.ம.உ. துந.க.எண்.எல்இ8/2696/2017</u>

(1)(b) *The lands purchased by autonomous bodies / Corporations from their own resources, and land already reflected as asset in their balance sheet.*

*In the case of autonomous bodies / corporation under Category (1 b) above, the land value shall be paid by Chennai Metro Rail Limited to the agency concerned* என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 40க்கும் மேற்பட்ட நிலங்கள் குத்தகைத்தொகை செலுத்த வேண்டுமென்ற அடிப்படையில் தற்காலிகமாகவும், நிலக்கிரயத்தொகை செலுத்த வேண்டுமென்ற அடிப்படையில் நிரந்தரமாகவும் அவசர, அவசியம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு முன்நுழைவு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தற்காலிக மற்றும் நிரந்தர அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள நிலங்களுக்கு வழிகாட்டு விலை மதிப்பின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட சுமார் 200 கோடி நிலுவைத்தொகையினை செலுத்துமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தினருக்கு பலமுறை கடிதம் அனுப்பப்பட்டும், இந்நாள்வரை ரூ. 1,84,36,352/- மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. இது 1% (சதவிகிதத்திற்கும்) குறைவானதாகும்.

இந்நிலையில் மேற்படி நிலமாற்றம் செய்யப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சியின் பெரும்பாலான நிலங்களுக்குரிய நிலக்கிரயத் தொகையினை வசூலிக்கப்படாத காரணங்களினால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பெரும் நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது.

மேலும், மேற்படி குத்தகை மற்றும் நிரந்தர அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள நிலங்களுக்குரிய நிலுவைத்தொகையினை வசூலிக்காத காரணத்தினால் தலைமை கணக்காயர் மற்றும் உள்ளாட்சி நிதித்தணிக்கை ஆகிய துறையினரால் தணிக்கைத்தடைகள் எழுப்பப்பட்டு இந்நாள் வரை தீர்வு செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது.

மேற்படி நிலுவைத்தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு விரைவில் செலுத்தும்பட்சத்தில், நில உரிமை மாற்றம் சம்பந்தமான நேர்வுகளில் உரிய முடிவெடுக்கப்படும் என மேலாண்மை இயக்குநர், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர்/சட்ட அலுவலர், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அவர்களின் 07.05.2018 நாளிட்ட கடிதத்தில், """சர்க்கார் புறம்போக்கு"" வகைப்பாடு கொண்ட மேற்படி நிலத்திற்குரிய நிலக்கிரயத்தொகையினை தவிர மற்ற நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதாகவும், திருவொற்றியூர் மெட்ரோ ஸ்டேஷன் பணிகளை துவங்க உடனடியாக மேற்படி நிலத்தினை ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கோரியுள்ள நிலமானது அன்சா அப்பார்ட்மெண்டின் திறந்தவெளி நிலமாக ஒதுக்கப்பட்டு (OSR Land) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு ஒப்படைக்கப்படும் திறந்தவெளி நிலங்களானது பெருநகர சென்னை மாநகராட்சியின் பட்டா நிலங்களாகவே கருதப்படும். இந்நிலமானது 2013ம் ஆண்டு 49.35 இலட்சம் செலவில் பூங்காவாக உருவாக்கப்பட்டது. தற்போது வரையில் பராமரிப்பு செலவாக ரூ.13,17,410/- செலவிடப்பட்டு பூங்காவாக பராமரிக்கப்பட்டு வரும் நிலமாகும்.

எனவே, இந்நேர்வில், அத்தியாவசிய திட்டமானதால், மண்டலம்-1, வார்டு-1, திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் கிராமம், பிளாக் எண். 1, புல எண். 38/2ல் உள்ள 1411.15ச.மீ பரப்பளவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி திறந்தவெளி நிலத்தில் 49.47 ச. மீ நிலத்தினை மட்டும் அவசர, அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.01.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**நி.ம.உ.-து.ந.க.எண்.எல்இ8/2696/2017**

**நிபந்தனைகள்:-**

- மேற்படி நிலத்திற்கு வழிகாட்டு விலை மதிப்பின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ள நிலக்கிரயத்தொகையான (49.47 x 36070 ச.மீ = 1784382.9) ரூ. 17,84,383/-ஐ (ரூபாய் பதினேழு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து முன்னூற்று எண்பத்தி மூன்று மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உடன் செலுத்த வேண்டும்.
- ஏற்கெனவே அமையப்பெற்றுள்ள பூங்காவின் அழகியலை பாதிக்கா வண்ணம் புதிதாக மதிற்சுவர் அமைப்பது மற்றும் பூங்கா பராமரிப்பு செலவினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

**"மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு முன் நுழைவு அனுமதி வழங்க, சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**இ.பொ.து.பொ.தொ.ந.க.எண்.w5/031/2018**

**தீர்மான எண்.035/2019** **நாள்:29-01-2019**

**இயந்திரப்பொறியியல் துறை - பொது தொழிற்சாலையில் உள்ள பயனற்ற இரும்புக்கழிவுகள் (200 டன்) ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய M/s MSTC Ltd, சேவை நிறுவனம் மூலம் 11.01.2019 அன்று மின்னணு ஏலம் நடைபெற்றதில் உயர்ந்த விலை ரூ.40,00,002/-கோரிய திருவாளர்கள். Crescent Steels., நிறுவனத்திற்கு பயனற்ற இரும்புக்கழிவுகள் ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி வழங்க அனுமதி.**

பெருநகர சென்னைமாநகராட்சி, இயந்திரப்பொறியியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள பொது தொழிற்சாலையில் பல்வேறு நிர்வாக பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட பயனற்ற இரும்புக்கழிவுகள் ஒரே தொகுப்பாக (சுமார் 200 டன்) உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யும் பொருட்டு மதிப்பாய்வு செய்வதற்கு மேற்பார்வை பொறியாளர் (இ) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக்குழு 19.12.2018 அன்று பொதுதொழிற்சாலையில் திறந்த வெளியில் உள்ள பயனற்ற இரும்புக்கழிவுகள் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. அவை அனைத்தும் பயனற்றவை என கழிவு செய்யப்பட்ட நிலையில் ஒரு கிலோ ரூ.20/- வீதம் 200 மெட்ரிக் டன்னுக்கு (2,00,000 கிலோ) மொத்த மதிப்பாக ரூ.40,00,000/- என நிர்ணயித்தும், இதனை ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி மின்னணு ஏலம் மூலம் விற்பனை செய்து தீர்வு செய்யலாம் என பரிந்துரைத்துள்ளது.

அதன்படி 09.01.2019 அன்று மின்னணு ஏலம் நடத்த திருவாளர்கள். MSTC Ltd., சேவை நிறுவனத்திற்கு 24.12.2018 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் திருவாளர்கள். MSTC Ltd., தங்கள் மின்னஞ்சல் கடிதம் மூலம் 08.01.2019, மற்றும் 09.01.2019 அன்று வங்கியில் பணி நிறுத்தம் காரணமாக மின்னணு ஏலம் தள்ளிவைக்க கோரினர்.

அதன்படி, 11.01.2019 அன்று மின்னணு ஏலத்தில் உயர்ந்த விலை கோரிய நிறுவனத்தின் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | விவரம் | தொழில்நுட்ப குழு மதிப்பீடு செய்ததொகை | மின்னணு ஏலத்தில் கோரிய உயர்ந்த விலை | உயர்ந்த விலை கோரியுள்ள ஏலத்தாரர் |
|---|---|---|---|---|
| 1 | பயனற்ற இரும்புக் கழிவுகள் (சுமார் 200 டன்) ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி விற்பனை செய்ய | ரூ.40,00,000/- | ரூ.40,00,002/- | Crescent Steels |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் அடிப்படையில் பொது தொழிற் சாலையில் உள்ள பயனற்ற இரும்புக்கழிவுகள் உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்ய மின்னணு ஏலத்தில் உயர்ந்த விலை கோரிய ஏலத்தாரர் Crescent Steels., அவர்களின் உயர்ந்த விலையான ரூ.40,00,002/-அதிகபட்ச நிர்ணய மதிப்பீட்டை (ரூ.40,00,000/-) ஒப்பிடும்போது (+) ரூ.2/- மட்டும் கூடுதலாக கோரப்பட்டுள்ளது. மேலும், மின்னணு ஏலத்தில் அதிகபட்ச விலையாகிய ரூ. 40,00,002/- கோரிய திருவாளர்கள்.Crescent Steels., நிறுவனத்திற்கு பயனற்ற இரும்புக்கழிவுகள் உள்ளது உள்ளபடி ஒரே தொகுப்பாக வழங்கலாம் என 21.01.2019ன் நாளிட்ட உயர்மட்ட ஒப்ப ஏற்பு குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே, 11.01.2019 அன்று நடைப்பெற்ற மின்னணு ஏலத்தில் அதிக விலை கோரியுள்ள திருவாளர்கள். Crescent Steels., நிறுவனம் அளித்த விலைப்புள்ளி ரூ.40,00,002/யில் முன்வைப்பு தொகையாக ரூ.10,00,001/யை (DD No.447653 dated. 18.01.2019 for Rs. 5,00,000/- மற்றும் DD No.447654 dated.18.01.2019 for Rs.5,00,001/- drawn on KVB Bank) திருவாளர்கள்.CrescentSteels.,யிருந்து திருவாளர்கள்.MSTC Ltd., நிறுவனம் பெற்றுக் கொண்டதாகவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் உறுதிப்படுத்தல் கிடைத்த உடன் கொடுப்பனவு விற்பனை ஆணையுடன் (Payment along with Sale order Copy) அனுப்பி வைக்கப்படும் எனவும் திருவாளர்கள்.MSTC Ltd., நிறுவனம் தங்கள் மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளனர்.

**இ.பொ.து.பொ.தொ.ந.க.எண்.w5/031/2018**

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி பொது தொழிற்சாலையில் உள்ள பயனற்ற இரும்புக் கழிவுகள் (சுமார் 200 டன்) உள்ளது உள்ளபடி ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய திருவாளர்கள். MSTC Ltd., சேவை நிறுவனம் மூலம் மின்னணு ஏலம் 11.01.2019. அன்று நடைபெற்றதில் திருவாளர்கள். Crescent Steels.,அவர்கள் கோரிய உயர்ந்த விலை ரூ.40,00,002/- விலையானது அதிகபட்ச நிர்ணய மதிப்பீட்டை (ரூ.40,00,000/-) ஒப்பிடும்போது (+) ரூ.2/- மட்டும் கூடுதலாக இருப்பதால் திருவாளர்கள். Crescent Steels., நிறுவனத்திற்கு பயனற்ற இரும்புக்கழிவுகள் உள்ளது உள்ளபடி ஒரே தொகுப்பாக விற்பனை செய்யவும்,
2. மேற்கண்ட பயனற்ற இரும்புக் கழிவுகள் ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி விற்பனை செய்யும் பொருட்டு மின்னணு ஏலத்தில் அதிக விலை ரூ. 40,00,002/- கோரிய திருவாளர்கள். Crescent Steels., நிறுவனத்தார் மொத்த ஏலத் தொகையில் தற்போது திருவாளர்கள். MSTC Ltd., நிறுவனத்தில் அளித்துள்ள 25% பாதுகாப்பு தொகையான ரூ.10,00,001/-மற்றும் மீதமுள்ள 75%தொகையான ரூ.30,00,001/- உடன் GST 18% ரூ.7,20,000/-வருமான வரி 1% ரூ.47,200/- அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமலிலுள்ள வரி தொகைக்கு ஏற்ப M/s. Crescent Steels., இருந்து பெறப்பட்டு மொத்த தொகையான ரூ.47,67,202/- திருவாளர்கள். MSTC Ltd., நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு தனித்தனியாக செலுத்துச்சீட்டின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் வரைவு காசோலையாக செலுத்தி, அனுமதி பெற்ற பின்னர் மேற்கண்ட பயனற்ற இரும்புக் கழிவுகள் ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி நிலையில் திருவாளர்கள். Crescent Steels., கொண்டு செல்ல அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.01.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

## H.D.C.NO. NULM/SUH/3157/2017

**Resolution No.036/2019** **Date:29-01-2019**

**Public Health Department – Directions of Hon'ble Supreme Court – Shelter for Urban Homeless – Action to be taken for construction of additional shelters – For Orders.**

One shelter for homeless is to be opened for every one lakh population in the Cities. Accordingly, 70 shelters are required for the City of Chennai comprising a population of 70 lakh people. Currently 38 shelters (excluding 13 special shelters) are functioning and construction for additional shelters has been sanctioned as follows;

Out of the 21 shelters sanctioned in the 5th PSC Meeting, Council resolution has been obtained for four shelters. An addition of three more locations have been identified for the construction of shelters,

| Sl. No | Zone | Div | Address of building | Current status of the building/land |
|---|---|---|---|---|
| 1 | 7 | 86 | Mannurpet, Manickam Pillai Street (near Metro water pumping station) | Vacant land |
| 2 | 11 | 151 | Porur UPHC campus | Vacant land |
| 3 | 5 | 63 | Pycrofts road, 1st street | Vacant land |

Hence, approving the location and construction of shelters at the above mentioned 3 places. Orders of the Special Officer-Standing Committee(Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested.Commissioner's note dated.26.01.2019 is read.

**"Approved by Special Officer- Standing Committee(Health), Standing Committee (Taxation and Finance) and Council."**

*****

**பொ.து.ந.க.எண்.ஈ2/2439/2019**

**தீர்மான எண்.037/2019** **நாள்:30-01-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - மருத்துவ சேவைகள் துறை - டாக்டர்.எம்.எஸ்.அம்பிகா, மருத்துவ அலுவலர், இராயபுரம் மருத்துவ மண்டலம், மருத்துவ சேவைகள் துறை அவர்கள், 31.01.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர மருத்துவ அலுவலர் / கூடுதல் இயக்குநர் (பொ.) அவர்களின் 23.01.2019 நாளிட்ட கடிதத்தில், பொதுத்துறையின் 22.12.2017 நாளிட்ட சுற்றறிக்கையில், பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையில், இராயபுரம் மருத்துவ மண்டலத்தில், மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர்.எம்.எஸ்.அம்பிகா, அவர்கள் 31.01.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் 14.10.1988 முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்தார். அதன் பின்னர் பல்வேறு மண்டலங்களில்/துறைகளில் பணிபுரிந்த விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | வகித்த பதவி | துறை/மண்டலம் | பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் | காஞ்சிபுரம் பெருநகராட்சி | 14.10.1988 முதல் 18.12.1989 வரை |
| 2 | | ஆலந்தூர் நகராட்சி | 19.12.1989 முதல் 21.05.1990 வரை |
| 3 | | பல்லவபுரம் நகராட்சி | 01.06.1990 முதல் 16.04.1991 வரை (16.04.1991 முதல் 29.04.1991 வரையில் கட்டாயமாக காத்திருந்த இடைப்பட்ட நாட்களை தகுதியுள்ள விடுப்பாக மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/1220/1991, நாள்.06.08.1994ன்படி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. |
| 4 | | ராயபுரம் மருத்துவ மண்டலம் | 30.04.1991 முதல் 31.01.2019 வரை |

தனியருக்கு ந.எண்.4029/97/எச்2, 26.05.1997-ன்படி 14.10.1988 முதல் மருத்துவ அலுவலர் .பதவியில் பணிவரன்முறையும் மற்றும் 05.02.1991 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்துள்ள மண்டலம்/துறைகளிலிருந்து முன்பண நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை இல்லை என அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் **21.01.2019** நாளிட்ட கடிதத்தில் சங்க உறுப்பினர் இல்லை என சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 18.01.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விழிப்புத்துறையில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 09.01.2019 நாளிட்ட குறிப்பில், டாக்டர்.எம்.எஸ்.அம்பிகா, அவர்கள் மருத்துவ அலுவலராக மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரிந்த காலங்களில் 1991-1992 முதல் 2016-17ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி நிலுவை ஏதுமில்லை என்றும்,

மேலும், 2017-18 மற்றும் 2018-19 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் வெளியிடப்படவில்லை என்றும் மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்றும் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ2/2439/2019**

மேலும், துறையில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை என சான்றளிக்கப்படுகிறது என்றும், தனியரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை என்றும், சென்னை மாநகராட்சி உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை என்றும் சான்று பெறப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் மீது 31.01.2019 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்து தெரியவரின் அத்தொகையை தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்கள், ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ள தனியர் ரூ.20/- முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

மேலும், தனியர் வகுப்பு 2ஐ சார்ந்த அலுவலர் என்பதால், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி - மன்றம் பெற்றுள்ளார்.

ஆகவே, மேற்காணும் விவரங்களின் அடிப்படையிலும் மற்றும் பெருநகர மருத்துவ அலுவலர்/கூடுதல் இயக்குநர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும், டாக்டர்.எம்.எஸ்.அம்பிகா, மருத்துவ அலுவலர், இராயபுரம் மருத்துவ மண்டலம் அவர்கள் மீது 2017-18 மற்றும் 2018-19 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதி தணிக்கையின் அறிக்கை வெளியிடப்படாத நிலையில், நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன்பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை 31.01.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி அனுமதி கோரிய ஆணையரது 30.01.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*****

**ம.அ.8.வ.து.ந.க.எண்.ஆர்1/6055/2018**

**தீர்மான எண்.038/2019** **நாள்:30-01-2019**

**மண்டலம் - 8 - வார்டு - 100 - 3வது நிழற்சாலை (மேற்கு) - சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்ட வணிக வளாக கட்டிடம் - ஒதுக்கீடு செய்யப்பட்டது - சாலை விரிவாக்கத்திற்காக நிலம் மீட்க அனுமதி.**

வார்டு-100, 3வது நிழற்சாலை, அண்ணாநகர் (மேற்கில்) சென்னை மாநகராட்சி கட்டிடத் துறையால் 34 வணிக வளாகக் கடைகள் கட்டப்பட்டன. அக்கடைகளை நிலம் மற்றும் உடைமைத் துறை மூலம் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் அந்த இடத்தில் ஏற்கெனவே பல ஆண்டுகளாக நடைபாதையில் கடைகள் நடத்தி வந்த பயனாளிகள் தங்களது சங்கமான அண்ணா மருத்துவமனை சிறு வியாபாரிகள் சங்கத்தை சார்ந்தோர்கள் 34 நபர்களுக்கு குறிப்பிட்ட வணிக வளாகத்தில் ஒதுக்கீடு செய்து தருமாறும், தங்களது வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்து தருமாறு கேட்டுக் கொண்டனர், மேலும், பழைய வார்டு 67, புதிய வார்டு - 100, அப்போதைய மாமன்ற உறுப்பினர் மேற்கண்ட வணிக வளாக கடைகளை சங்கத்தை சார்ந்தவர்களுக்கு ஒதுக்கீடு செய்து தருமாறு பரிந்துரை செய்துள்ளார்.

இந்நிலையில் அங்கு ஏற்கெனவே நடைபாதையில் கடைகள் நடத்தி வந்த அண்ணா மருத்துவ மனை சிறு வியாபாரிகள் சங்கத் தலைவர் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். மேற்கண்ட உயர்நீதிமன்ற நீதிப் பேராணை எண். W.P.No. 878/1995 மற்றும் W.M.P.No. 1333/1995, நாள். 05.03.1996ல் அண்ணாநகர் 3 வது அவின்யூவில் அண்ணா மருத்துவமனை அருகில் சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்ட வணிக வளாக கடைகளை மேற்கண்ட சங்கத்தை சார்ந்தவர்களை தவிர வேறு எவருக்கும், ஒதுக்கீடு செய்யக் கூடாது என இடைக்கால தடை விதித்துள்ளது.

எனவே. சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி நடைபாதை சிறு வியாபாரிகள் சங்கத்தின் பட்டியலின்படி 58 பயனாளிகளில் 34 நபர்களுக்கு மட்டும் சங்கத்தின் ஒப்புதலோடு வணிக வளாக கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்கண்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட 34 கடைகளில் கடை எண். 1 முதல் 16 வரை வார்டு எண் 101ல் செயல்பட்டு வருகின்றது, மற்றும் வணிகவளாக கடை எண். 17 முதல் 34 வரை வார்டு 100ல் செயல்பட்டு வருகிறது.

ஏற்கெனவே, வார்டு 100, 3வது நிழற்சாலையில் அமைந்துள்ள 76 நேதாஜி வணிக வளாக கடைகள் சாலை விரிவாக்கத்திற்கு நிலம் மீட்க ஆணை பெறப்பட்டு அறிவிப்பு வழங்கப்பட்டது. இந்த நேதாஜி வணிக வளாக கடைகளுடன் ஒட்டி அமைந்துள்ள மேற்கண்ட வணிக வளாக கடைகளான எண் 17 முதல் 34 வரை 18 (கடைகளும்), சாலையின் எதிர்புறம்(கிழக்கு பக்கம்) அமைந்துள்ள 1 முதல் 16 வரை அமைந்துள்ள கடைகளும், சாலை விரிவாக்கத்திற்காக தேவைப்படுகிறது. மேலும் அப்பகுதியில் மழைநீர் செல்வதற்காக கட்டப்பட்டுள்ள மழைநீர் கால்வாய்கள் மீது ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இதனால் மழை காலங்களில் மழைநீர் வெள்ளம் கால்வாய்க்கு செல்வதற்கு எவ்வித வழிவகை இல்லாததினால், மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பொதுமக்கள் மிகவும் பாதிப்பிற்குள்ளானார்கள். சமீப காலமாக ஏற்பட்ட மழையிலும் கூட 3வது நிழற்சாலையில் அதிக வெள்ளம் சாலையில் தேங்கியதன் பொருட்டு மக்கள் அவதிக்குள்ளாயினர் .

மேலும், போக்குவரத்து நெரிசலின் போது, பொதுமக்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுவதை கருத்தில் கொண்டு சமீப காலத்தில் ஈ.வே.ரா. பெரியார் சாலையில் இருந்து 3வது அவின்யூ வழியாக மேம்பாலம் அமைக்கப்பட்டது. இந்த மேம்பாலம் அமைக்கப்படும் பொழுது இக்கடைகளின் அருகாமையில் சேவை சாலை (Service Road) அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அமைக்கப்பட்டுள்ள சேவை சாலை மிகவும் குறுகலாக இருப்பதால் அதனை விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த சாலை விரிவாக்கம் செய்வதற்கு இந்த கடைகளை அகற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் நிலம் மற்றும் உடைமை துறை ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட 34 கடைகளுக்கு உரிமம் வாடகை மாதம் ஒன்றுக்கு சதுரடிக்கு ரூ.10/. வீதம் நிர்ணயிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கீழ்கண்டுள்ள நிபந்தனைகளுடன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ம.அ.8.வ.து.ந.க.எண்.ஆர்1/6055/2018**

**நிபந்தனைகள்**

1. கடையின் ஒதுக்கீட்டாளர் உரிமம்தாரர் என அழைக்கப்படுவார்.
2. உரிமம்தாரர் பிரதிமாதம் 5-ம் தேதிக்குள் உரிமம் தொகை வருவாய் அலவலர், சென்னை மாநகராட்சி என்ற பெயரில் வரைவு காசோலை செலுத்தப்பட வேண்டும்.
3. உரிமம்தாரர் பிரதிமாதம் 5-ம் தேதிக்குள் உரிமத் தொகை செலுத்தப்பட வில்லை என்றால் ஒவ்வொரு நாளும் ரூ. 10/- தண்டத் தொகை செலுத்தப்பட வேண்டும்.
4. உரிமம்தாரர் (Licence) ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகளுக்கு நேரடியாக மின்சாரக் கட்டணம் மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும்.
5. உரிமம்தாரர் ஒதுக்கீடு செய்யப்பட்ட கடையினை நல்ல நிலயில் பராமரிக்கப்பட வேண்டும், மேலும் உரிமம் வழங்குபவர் சார்பாக கடையினை ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.
6. உரிமம்தாரர் ஒதுக்கப்பட்ட கடைக்கு காப்பீடு செய்யப்பட வேண்டும், மேலும் தீ விபத்து ஏற்பட்டால் அச்சமயத்தில் காப்பீடு உண்மை நகல் உரிமம்தாரரால் அளிக்கப்பட வேண்டும்.
7. உரிமம் வழங்குபவரின் முன் அனுமதியில்லாமல் கூடுதல் கட்டுமானம் பணிகள் மேற்கொள்ளக் கூடாது.
8. உரிமம்தாரர் ஒதுக்கப்பட்ட கடையினை யாருக்கும் மேல் வாடகைக்கு விடக்கூடாது.
9. உரிமம்தாரர் எந்த நோக்கத்தோடு தொழில் நடத்த கடை ஒதுக்கப்பட்டதோ, அந்த தொழில் மட்டுமே நடத்தப்பட வேண்டும். தொழில் மாற்றம் செய்து கடை நடத்த விரும்பினால், உரிமம் வழங்குபவரின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
10. உரிமம்தாரர் கடை நடத்த விரும்ப வில்லையெனில் ஒரு மாதத்திற்கு முன்பு, கடை ஒப்படைவு செய்ய அறிவிப்பு கடிதம் உரிமம் வழங்குபவருக்கு அளிக்கப்பட வேண்டும். அதற்கு முன் உரிமம் தொகை நிலுவை இல்லாமல் செலுத்தியிருக்க வேண்டும்.
11. உரிமம் வழங்குபவருக்கு கடை தேவைப்படும் நிலையில், உரிமம்தாரருக்கு ஒரு மாதத்திற்கு முன்பு கடை காலி செய்து ஒப்படைவு செய்ய அறிவிப்பு கடிதம் வழங்கப்பட வேண்டும். மேலும் உரிமம்தாரர் தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் உரிமம் தொகை செலுத்த வில்லையெனில் எவ்வித அறிவிப்பும் இல்லாமல் உரிமம் வழங்குபவரால் ஒதுக்கீடு ஆணை ரத்து செய்யப்படும். காவல்துறை உதவியுடன் கடையினை மூடி சீல் வைக்கப்படும். அதன்பின்பு கடையில் உள்ள பொருட்கள் இருப்பு பதிவேடு மூலம் பதியப்பட்டு அப்பொருட்கள் பத்திரப்படுத்தி காலி கடையினை உரிமம் வழங்குபவரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படும்.
12. மின்சார இணைப்பு உரிமம் வழங்குவரின் பெயரில் மட்டுமே பெறப்பட வேண்டும்.
13. வணிக வளாக கட்டிடம் மற்றும் கடைகளை சுற்றிலும் சுத்தமான முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.
14. வணிக வளாக கட்டிடங்கள் எவ்வித பாதிப்பு இல்லாமல், சென்னை மாநகராட்சி என்ற பெயரில் பெயர் பலகை பொறுத்தப்படுவதோடு, கதவு எண், கடை எண் மற்றும் ஒதுக்கீடு ஆணை, ஆகியவை அதிகாரிகளின் பார்வையில் படும்படி வைக்கப்பட வேண்டும்.
15. உரிமம் வழங்குபவர் மற்றும் உரிமம்தாரர் ஏற்படுத்திக் கொண்ட இந்த ஒப்பந்த பத்திரம் ஏதேனும் கருத்து வேறுபாடுகள் ஏற்படின் உரிமையியல் நீதிமன்றம் அல்லது உயர்நீதி மன்றத்தில் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட 11 மாதத்திற்குப் பிறகு எந்த உரிமம்தாரரும் குத்தகை உடன்படிக்கை புதுப்பிக்கவில்லை மற்றும் குத்தகைதாரர்கள் பலரும் உரிமம் தொகையும் செலுத்தாமல் நிலுவை வைத்துள்ளனர். மேலும், சென்னை மாநகராட்சி வணிக வளாக கடைகளில் 9 ஆண்டு காலம் முடிவுற்ற கடைகளுக்கு வாடகையை சந்தை விலை மதிப்பில் மறுமதிப்பீடு செய்யும் போது சாலை விரிவாக்கத்திற்கு இக்கடைகள் இடிக்க நேரிடும் என்ற நோக்கத்தில் இந்த 18 கடைகளுக்கும் வாடகை மாற்றியமைக்கப்பட வில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் 34 கடைகளும் மாத வாடகையை பல வருடங்களாக மாநகராட்சிக்கு செலுத்தப்படாமல் ரூ.4.63 லட்சங்கள் நிலுவையில் உள்ளன. இந்த கடைகளினால் மாநகராட்சிக்கு கனிசமாக எந்த வருவாயும் ஈட்டப்படுவதில்லை. மேலும், ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்க,ப்பட்ட உத்தரவில் எந்த சூழ்நிலையிலும் பிறருக்கு மாற்றம் செய்யக் கூடாது என்று

தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பல ஒதுக்கீடுதாரர்கள் உரிமம் ஒப்பந்தத்தை மீறி உள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

மேலும், சிறப்பு அதிகாரி மன்ற தீர்மானம் எண்.892/2018, நாள். 29.10.2018ன்படி வார்டு – 100, 3வது நிழற்சாலையில் அமைந்துள்ள 76 நேதாஜி வணிக வளாக கடைகள் சாலை விரிவாக்கத்திற்கு நிலம் மீட்க ஆணை பெறப்பட்டது. இதனை தொடர்ந்து இந்த வணிக வளாக கடைகளை ஒட்டி அமைந்துள்ள கடை எண். 17 முதல் 34 வரை (18 கடைகள்) அப்புறப்படுத்த சிறப்பு அதிகாரி-மன்ற தீர்மானம் எண்.886/2018, நாள்.25.10.2018ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்கண்ட வணிக வளாக கடைகளுடன் சாலையின் எதிர்புறம் அமைந்துள்ள 1 முதல் 16 வரையுள்ள (16 கடைகளும்), மழைநீர் வடிகால்வாய் அமைக்கவும், சாலை விரிவாக்கத்திற்கும் தேவைப்படுவதால் சிறப்பு அதிகாரி அவர்களின் திருத்திய ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

1. மழைநீர் கால்வாய் மீது கட்டப்பட்டுள்ள, 20 வருடங்களுக்கு மேலாக சென்னை மாநகராட்சிக்கு எந்த வித வருவாயும் இல்லாத இந்த 34 கடைகளை (18 + 16) பொதுமக்கள் நலன் கருதி மழைநீர் வடிகால்வாய் அமைக்கவும், சாலை விரிவாக்கத்திற்காகவும், வணிக வளாக கடைகளை காலி செய்ய 15 நாட்கள் அவகாசம் அளித்து அறிவிப்பு வழங்கி காலி செய்த பின்னர் கடைகளை தகர்ப்பு செய்யவும்,
2. சாலை விரிவாக்கத்திற்காக இடிக்கப்பட வேண்டிய இந்த 34 கடைகளுக்கும் பல வருடங்களாக மாத வாடகை செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ள ரூ.4.63 இலட்சத்தை தள்ளுபடி செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.01.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*****

**ம.அ.5.ந.க.எண்.18085 /2018**

**தீர்மான எண்.039/2019** **நாள்:31-01-2019**

**மண்டலம்-5 - வார்டு-61- எழும்பூர் வட்டம் , எழும்பூர் கிராமம் , பிளாக் எண்.54, புல எண். 1636/2 - மேயர் சுந்தரராவ் பூங்கா - கூவம் நதி மறுசீரமைப்பு அறக்கட்டளை- பணிகள் மேற்கொள்ள சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு முன் நுழைவு அனுமதி வழங்க அனுமதி.**

சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், பகுதி பொறியாளர்-5, அவர்கள் தனது 28.12.2017 நாளிட்ட கடிதத்தில் எழும்பூர் தெற்கு கூவம் ஆறு சாலையில் புதிதாக குழாய்கள் அமைத்து கூவம் நதிக்கு செல்லும் கழிவுநீர் மற்றும் மழைநீரை மறுசுழற்சி செய்து கூவம் நதியில் செலுத்தும் திட்டம் உள்ளதாகவும் இதனால் கூவம் நதியின் கரையோரத்தில் தெற்கு கூவம் ஆறு சாலை, ருக்மணி இலட்சுமிபதி சாலையில் உள்ள மேயர் சுந்தர்ராவ் பூங்கா வரை அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவின் உட்பகுதியில் (சங்கிலி அளவு 4300 மீட்டர் முதல் 5400 மீட்டர் வரை) புதிதாக குழாய்கள் பொருத்துவதற்கு அனுமதி வேண்டி கடிதம் அளித்துள்ளார்கள்.

மேலே குறிப்பிட்ட நிலமானது பெருநகர சென்னை மாநகராட்சி வார்டு-61, மண்டலம்-5, பிளாக் எண்.54, புல எண். 1636/2ல் அமைந்துள்ள பொது மக்கள் உபயோகப்படுத்தும் சாலையோர பூங்காவாகும்.

கூவம் நதி மறுசீரமைப்பு அறக்கட்டளை பணிகள் துரிதமாக செயல்படுத்த அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு-61, மண்டலம்-5, பிளாக் எண்.54, புல எண். 1636/2 அமைந்துள்ள சாலையோர பூங்காவினை, 520 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தினை சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள சில நிபந்தனைகளுடன் முன் நுழைவு அனுமதி வழங்க சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.01.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“முன் நுழைவு அனுமதி வழங்க சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*****